தினமணி

**தலையங்கம்:உற்பத்திக்கு உதவாது!**

First Published : 28 Jan 2010 12:28:00 AM IST
Last Updated : 28 Jan 2010 02:25:49 AM IST

செயல்படுத்துகிறார்களோ இல்லையோ நமது ஆட்சியாளர்கள் நிறையப் பேசுகிறார்கள். அக்கறையுடனும், ஆதங்கத்துடனும் பதவியில் இருப்பவர்கள் கருத்துகளைக் கூறும்போது ஏதோ இதுபற்றிய நினைப்பாவது இவர்களுக்கு இருக்கிறதே என்று நம்மை நாமே தேற்றிக் கொள்ளத் தோன்றுகிறது.

குடியரசுத் தலைவர் பிரதிபா பாட்டீல் நிகழ்த்திய குடியரசு தின உரையில், இரண்டாவது பசுமைப்புரட்சிக்கு வித்திட வேண்டும் என்கிற கோரிக்கையை முன்வைத்திருக்கிறார். "உலகளாவிய உணவுப் பற்றாக்குறையும், அதன் விளைவாக உணவுப் பொருள்களின் விலை உயர்வும் கவலை அளிக்கிறது.

நாம் உணவுப் பொருள் உற்பத்திக்கு முன்னுரிமை அளித்து, பணப்பயிருக்கு முக்கியத்துவம் அளிக்காமல் அதிக அளவில் நமது விவசாயிகளை உணவு தானிய உற்பத்தியில் ஈடுபட ஊக்குவிக்க வேண்டும்' என்பது அவரது குடியரசு தின உரையின் முக்கியமான அம்சம்.

புதிய தொழில்நுட்பம், தரமான விதைகள், மேம்பட்ட சாகுபடி முறைகள், கடனுதவி போன்றவை விவசாயிகளுக்கு எளிதில் கிடைப்பதற்கான வழிமுறைகளை அரசு போர்க்கால நடவடிக்கையில் செய்து தர வேண்டும் என்றும் தனது உரையில் அவர் குறிப்பிட்டார். குடியரசுத் தலைவர் மட்டுமல்ல, பொறுப்புள்ள பதவியில் இருக்கும் பலரும் இதே கருத்துகளை அடிக்கடி கூறி வருகிறார்கள். ஆனால், இதற்குச் செயல்வடிவம் கொடுக்க வேண்டியது யார்? இப்படிப் பேசுபவர்கள்தானே என்பதை நினைக்கும்போது சிரிப்பதா, அழுவதா என்று தெரியவில்லை.

மத்திய வேளாண்துறை மற்றும் நுகர்வோர் நலத்துறை அமைச்சர் சரத் பவார், விலைவாசி உயர்வுக்குக் காரணம் தான் மட்டுமல்ல என்றும், மத்திய அமைச்சரவைக்கும், மாநில அரசுகளுக்கும் இதில் பங்கு உண்டு என்றும் பேசியிருக்கிறார். மத்திய அரசும், மாநில அரசுகளும் தங்களுக்கும் விலைவாசி உயர்வுக்கும் சம்பந்தமே கிடையாது என்று, பொறுப்பைத் தட்டிக் கழிக்கும் முயற்சியிலும் ஈடுபட்டு, உணவுப் பொருள்களின் விலை குறைந்துவிடாமல் பார்த்துக் கொள்கிறார்கள்.

விவசாயம் நலிந்து கொண்டிருக்கிறது. ஆண்டுதோறும் பல ஆயிரம் ஹெக்டேர் விளைநிலங்கள் குடியிருப்புகளாகவும், தொழிற்சாலைகளாகவும், நெடுஞ்சாலைகளாகவும் மாற்றப்பட்டு வருகின்றன.

ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கில் விவசாயிகள் விவசாயம் செய்வதை விட்டுவிட்டு வேறு பிழைப்பைத் தேடி அருகிலுள்ள பட்டணங்களுக்குக் குடிபெயர்ந்தவண்ணம் இருக்கிறார்கள்.

விவசாயம் செய்ய வேண்டும் என்று பிடிவாதமாக இருக்கும் விவசாயிகளுக்குக் கூலி வேலை செய்ய ஆள்கள் கிடைப்பதில்லை. உடல்நோகாமல் நூறு நாள் வேலைவாய்ப்புக் கிடைக்கும்போது, சகதியில் இறங்கி கஷ்டப்பட்டு வேலை பார்த்து அதிக வருமானம் சம்பாதிக்க பலருக்கும் மனமில்லை. வேளாண்மை இல்லாத வறட்சியான பகுதிகளில் மட்டும்தான் கட்டாய வேலைவாய்ப்புத் திட்டம் என்று திட்டவட்டமாக முடிவெடுக்க வாக்கு வங்கி அரசியல் நமது ஆட்சியாளர்களைத் தடுக்கிறது.

தேசியக் குற்றப்புள்ளிவிவரத்துறை இணையதளத்தில் வெளியிட்டிருக்கும் புள்ளிவிவரங்கள் அதிர்ச்சி அளிக்கின்றன. 2008-ம் ஆண்டு விவசாயக் கடன் தள்ளுபடி அறிவித்த பிறகும் 16,196 விவசாயிகள் தற்கொலை

செய்து கொண்டிருக்கிறார்கள் என்கிறது அந்தக் குறிப்பு. முந்தைய ஆண்டைவிட 436 பேர் குறைவாகத் தற்கொலை செய்துகொண்டனர், அவ்வளவே!

1991-ம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்புக்கும் 2001-ம் ஆண்டு கணக்கெடுப்புக்கும் இடையில் சுமார் 80 லட்சம் விவசாயிகள் விவசாயம் செய்வதை நிறுத்தியிருக்கிறார்கள். 2011-ல் கணக்கெடுக்கும்போது கடந்த 10 ஆண்டுகளில் அதைவிட இரண்டு மடங்கு அதிகம் விவசாயிகள் ஒன்று நிலத்தை விற்றிருப்பார்கள் அல்லது விவசாயம் செய்வதை விட்டிருப்பார்கள்.

ஒட்டுமொத்த மக்கள்தொகையில் விவசாயிகள் தற்கொலையின் விழுக்காடு எவ்வளவு என்று கணக்கெடுப்பது தவறு. மக்கள்தொகை அதிகரித்து வருகிறது. ஆனால், விவசாயிகளின் எண்ணிக்கையோ குறைந்து வருகிறது. குறைந்து வரும் விவசாயிகளின் எண்ணிக்கையில் விவசாயிகள் தற்கொலைகள் எவ்வளவு என்றல்லவா புள்ளிவிவரம் எடுக்கப்பட வேண்டும்.

பல ஆயிரம் கோடி ரூபாய் கடன் நிவாரணம் என்ற பெயரில் அரசு வழங்கியதே என்று கேட்கலாம். அரசு வழங்கியது அனைத்துமே வங்கிகளைக் கொழிக்க வைத்தனவேதவிர ஏழை விவசாயிகளை வாழ வைக்கவில்லை. வலது கை கொடுத்ததை இடது கை வாங்கிக் கொண்டது அவ்வளவே.

வங்கியில் விவசாயி வாங்கியிருந்த கடனை ரத்து செய்து அந்தப் பணத்தை அரசு வங்கிகளுக்கு அரசே அளித்தது. விவசாயி தனியாரிடம் கந்து வட்டிக்கு வாங்கியதைத் திருப்பிக் கொடுக்க வழியில்லாமல் தனது நிலத்தை இழந்தான். அடுத்த சாகுபடிக்குப் பணம் இல்லாமல் ஏனைய பல விவசாயிகள், விவசாயம் செய்வதை மறந்தனர். இதுதான் நடந்தது.

குடியரசுத் தலைவர் நல்லதொரு எச்சரிக்கையையும் ஆலோசனையையும் கூறியிருக்கிறார். அவர் கூறியிருப்பதுபோல போர்க்கால நடவடிக்கையில் விவசாயம் காப்பாற்றப்பட்டே தீர வேண்டும். அதற்கு, முதலில் விவசாய நிலங்களை வேறு பயன்பாட்டுக்கு மாற்றுவது தேசிய அளவில் எந்தவித விலக்கும் அனுமதிக்கப்படாமல் தடை செய்யப்பட வேண்டும். கட்டாய வேலைவாய்ப்புத் திட்டம் என்பது தரிசுநிலப் பகுதிகளிலும், வறட்சியான மாவட்டங்களிலும் மட்டுமே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

உதட்டளவு அனுதாபம் உணவுப்பொருள் உற்பத்தியை அதிகரிக்க உதவாது!

### வேளாண் விளைபொருள் விற்பனை மையம் தொடக்கம்

First Published : 28 Jan 2010 02:49:46 AM IST

தருமபுரி, ஜன.27: பாலக்கோடு அருகேயுள்ள ஜிட்டாண்டஅள்ளியில் ஆத்மா வேளாண் வணிகத் திட்டத்தின் கீழ் வேளாண் விளைபொருள் விற்பனை மையம் தொடங்கப்பட்டது.

தருமபுரி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநரும், ஆத்மா திட்டத்தின் இயக்கநருமான எம்.எஸ்.முகமதுஅலி இம்மையத்தை புதன்கிழமை துவக்கி வைத்து பேசியது:

தருமபுரி மாவட்டத்தில் துல்லியப் பண்ணை திட்டத்தில் தோட்டக்கலை பயிர்கள் அதிக அளவு உற்பத்தி செய்யப்படுகிறது. மா, தக்காளி, பப்பாளி, கொய்யா உள்ளிட்ட பழ வகைகள், முட்டைகோஸ், கத்தரி, பீன்ஸ், மிளகாய் உள்ளிட்ட காய்கறிகளுக்கு வெளி மாநிலங்கள், மாவட்டங்களில் அதிக வரவேற்பு உள்ளது.

இம்மாவட்டத்தில் மிகப் பெரிய சந்தைகள் இல்லாததால் விளைபொருள்களுக்கு போதிய விலை இல்லை .

இதனால், மாவட்ட வேளாண் வணிகத் துறை மூலம் வெளி மாவட்ட, மாநிலத்திலிருந்து வந்து நேரடி கொள்முதல் செய்யும் வகையில் பல்வேறு தனியார் நிறுவனங்கள் மாவட்டத்தில் உள்ள விற்பனை மையங்களுக்கு வரவழைக்கப்படுகின்றன.

இதன் மூலம் விவசாய விளைபொருள்களுக்கு அதிக விற்பனை விலை கிடைக்கிறது. மாவட்டத்தில் விளைவிக்கப்படும் காய்கறிகள், பழங்களை விவசாயிகளிடமிருந்து அப் பகுதிகளில் உள்ள விளைபொருள் குழுக்கள் வாங்கி தனியார் நிறுவனங்களிடம் நேரடியாக விற்பனையும். இதன் மூலம் சென்னை, பெங்களூர், ஒட்டன்சத்திரம், கோவை மாவட்டங்களில் உள்ள வேளாண் சந்தைகளில் நிர்ணயிக்கப்படும் காய்கறிகளின் விலைக்கே இங்கு கொள்முதல் நடைபெறும்.

தருமபுரி மாவட்டத்தில் 136 விளைபொருள் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு ஆத்மா விளைபொருள் விற்பனை திட்டத்திற்காக ரூ.1.8 லட்சம் செலவிடப்பட்டுள்ளது என்றார் அவர்.

தருமபுரி மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) (பொறுப்பு) எஸ்.லட்சுமிராஜ், தோட்டக்கலை துறை துணை இயக்குநர் சி.துரைசாமி, தருமபுரி கோட்ட வேளாண் அலுவலர் தா.தாம்சன், ஜிட்டாண்டஅள்ளி விற்பனைக் குழு தலைவர் பா.ப.ஜெயராஜ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

### நலிவடைந்து வரும் பாய் முடைதல் தொழில்

கே. சுரேஷ்
First Published : 26 Jan 2010 09:59:08 AM IST

ஆலங்குடி, ஜன. 25: விலைவாசி உயர்வு, உற்பத்தி பொருள்களுக்கான விலை குறைவினால் பாரம்பரியமிக்க பாய் முடையும் தொழில் நலிவடைந்து வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி அருகேயுள்ள கறம்பக்குடி ஒன்றியத்தில் உள்ளது தீத்தான்விடுதி கிராமம். இங்கு அன்றாடத் தேவைக்கே திண்டாடும் நிலையில் இருந்த இப்பகுதி மக்கள், தங்களது

தேவைகளை ஓரளவு நிறைவு செய்துகொள்வதற்கு, 1953- ம் ஆண்டிலிருந்து குடும்பத்தோடு பாய் முடையும் தொழிலை பிரதானமாக செய்து வருகின்றனர்.

அதற்காக, அப்பகுதியில் செல்லும் ஆற்றில் வளர்ந்துள்ள கோரைகளைக் கொண்டு வந்து அதைப் பக்குவப்படுத்தி, தேவைக்கு ஏற்றவாறு சாயமேற்றி பாய் முடைவதற்கு பயன்படுத்தினர்.

பாய் முடைவதற்கு கோரையுடன் தேவைப்படும் நாருக்கு ஆலங்குடி வட்டாரத்தில் பெரும்பாலான பகுதி காடாக இருந்ததால், அப்பகுதியில் எளிதாகக் கிடைத்த கற்றாழைகளில் இருந்து நார் திரித்து இயந்திரம் இன்றி பாய்களை முடைந்தனர்.

இந்தக் கிராம மக்கள் இந்தத் தொழிலையே தொடர்ந்து செய்து புதுக்கோட்டை மட்டுமன்றி பிற மாவட்டங்களுக்கும் எடுத்துச் சென்று விற்பனை செய்தனர்.

மேலும், பிற பகுதிகளுக்கு இந்தப் பாய்களை அனுப்பியதால், கறம்பக்குடி பகுதியில் இருந்து வெளியூர்களுக்கு அனுப்பப்படும் பொருளாக பாய் மட்டுமே திகழ்ந்தது.

இதையடுத்து, அரசு முன்வந்து இங்கு 1956-ம் ஆண்டு கதர் வாரியத்தால் தொடங்கப்பட்ட பாய் கூட்டுறவு மையம் மூலம் அந்தக் கிராமத்தில் முடையப்படும் பாய்களைக் கொள்முதல் செய்து, அரசின் ஆதரவற்ற இல்லங்கள், மருத்துவமனைகள், விடுதிகள் எனப் பல்வேறு துறைகளுக்குப் பயன்படுத்தினர்.

புதுகை மாவட்டத்துக்கு வருகை தரும் முதல்வர் உள்ளிட்ட பல்வேறு துறை அமைச்சர்கள்,கட்சியின் தலைவர்களுக்கு இங்கு முடையப்படும் பாயில் அவர்களது பெயரை முடைந்து பரிசாகவும் கொடுத்துள்ளனர்.

மேலும், திருமண விழாக்களுக்கு மணமக்களின் பெயரை முடைந்து விற்பனை செய்துள்ளனர். இதில் கிடைக்கும் வருமானத்தைவிட இந்தத் தொழிலை பெரும் கலையாகவும் கருதினர்.

இந்நிலையில், சமீபகாலமாக உயர்ந்து வரும் அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வால், பாய் முடைதல் தொழிலை விட்டு விட்டு விவசாயம், கூலி வேலைகளைச் செய்து வருகின்றனர். தற்போது ஒருசிலர் மட்டுமே பாய் முடைதல் தொழிலைச் செய்து வருகின்றனர்.

இதனால், சுமார் 10 ஆண்டுகளாக கூட்டுறவு மையம் செயல்படாமல் உள்ளது.
இதுகுறித்து பாய் முடையும் தொழிலாளி ஆ. சின்னப்பா கூறியது:

நாள் ஒன்றுக்கு மூன்று பாய்கள் மட்டுமே முடைய முடியும். ஒரு பாயின் விலை ரூ.50 என விற்கப்படுகிறது. மேலும், விவசாய வேலைக்குச் சென்றால் குறைந்த நேரத்தில் அதிகமான தொகை கிடைத்துவிடும். கோரை, கற்றாழை நார் கிடைப்பதில்லை என்பதால் பாய்


தொழில் நலிவடைந்துவிட்டது. எனக்கு வேறு வேலை தெரியாததால், இந்தத் தொழிலை செய்து வருகிறேன் என்றார் அவர்.
இதுகுறித்து ஊராட்சி மன்றத் தலைவர் ரெ. வள்ளியம்மை கூறியது:

வேலைவாய்ப்பு குறைவாக இருப்பதால், தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் அதிகமாக வேலை கொடுத்து வருகிறோம்.

அரசு இப்பகுதி மக்களுக்கு கோரை விவசாயம் மேற்கொள்ளும் வசதிகளுடன் இயந்திரங்களை வழங்கினால், சுமார் 10 பேருக்கு மேல் வேலைவாய்ப்பு அளிக்கப்படும். அதன்மூலம் நாளொன்றுக்கு 100 பாய் முடையப்படும். இதன்மூலம் பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்ள ஏதுவாக அமையும் என்றார் அவர்.

எனவே, நலிவடைந்து வரும் பாய்முடைதல் தொழிலை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர்.

**உணவுப் பொருள் விலை உயர்வைக் கட்டுப்படுத்த ஆர்பிஐ நடவடிக்கை அவசியமில்லை: பவார்**
First Published : 28 Jan 2010 01:39:07 AM IST



புது தில்லி, ஜன.27: உணவுப் பொருள் விலை உயர்வைக் கட்டுப்படுத்த பணப் புழக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியமில்லை என்று மத்திய வேளாண் அமைச்சர் சரத் பவார் தெரிவித்துள்ளார்.

உணவுப்பொருள் விலை உயர்வைக் கட்டுப்படுத்த மத்திய ரிசர்வ் வங்கி தனது நிதிக் கொள்கையின்போது வட்டி விகிதத்தை உயர்த்தும் என தெரிகிறது. ரிசர்வ் வங்கியின் நிதிக் கொள்கை ஜனவரி 29-ம் தேதி வெளியாக உள்ளது. இந்நிலையில் சரத் பவார் இக்கருத்தைத் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

உற்பத்தி அதிகரித்து அதிக அளவில் உணவுப் பொருள்கள் விற்பனைக்கு வரும்போது பொருள்களின் விலை குறையும். அதேபோல உணவுப் பொருள் கையிருப்பு நிலை உயரும்போது பணவீக்கமும் தானாகக் குறையும் என்று அவர் கூறினார்.

ஏற்கெனவே அரசு எடுத்த நடவடிக்கையால் சர்க்கரை விலை குறையத் தொடங்கியுள்ளதும். மேலும் சர்க்கரை ஆலைகள் அதிக அளவில் கச்சா சர்க்கரையை இறக்குமதி செய்ய உள்ளன. மேலும் இவ்விதம் இறக்குமதி செய்யும் சர்க்கரையை நாட்டின் எந்தப் பகுதியில் உள்ள ஆலையிலும் சுத்திகரிக்கலாம் என அரசு விலக்கு அளித்துள்ளது.

மொத்த விலை அடிப்படையில் சர்க்கரையின் சில்லரை விற்பனை விலை குறையவில்லை. குவிண்டால் ரூ. 4,000-லிருந்து தற்போது ரூ. 3,500 ஆகக் குறைந்துள்ளது. மேலும் குறையும்போது சில்லரை விற்பனை விலை குறையும். இப்பிரச்னைக்கு முக்கியக் காரணமே இன்று வரை குஜராத்தின் காண்ட்லா துறைமுகத்தில் 9 லட்சம் டன் சர்க்கரையை நிறுவனங்கள் எடுத்துச் செல்லாததே. உத்தரப் பிரதேச அரசு, இறக்குமதி கச்சா சர்க்கரையை சுத்திகரிக்க அனுமதிக்கவில்லை. இதுவே தவறான முன்னுதாரணமாக அமைந்துவிட்டது. இதனாலேயே சர்க்கரை விலை உயர்ந்தது. நல்லவேளையாக தற்போது குறையத் தொடங்கியுள்ளது என்றும் அவர் கூறினார்.

நடப்பு கரும்பு அறுவை சீசன் முடியும் வரை இறக்குமதி செய்யப்பட்ட கச்சா சர்க்கரையை சுத்திகரிக்க சர்க்கரை ஆலைகளுக்கு உத்தரப் பிரதேச அரசு தடை விதித்தது. இதனால் 9 லட்சம் டன் கச்சா சர்க்கரை காண்ட்லா துறைமுகம் வந்த போதிலும் அதை பயன்படுத்த முடியாத சூழல் ஏற்பட்டது.

சர்க்கரை உற்பத்தி நடப்பு பருவத்தில் 1.6 கோடி டன்னாகும். இருப்பினும் தேவை 2.3 டன்னாக உள்ளது. இதனால் சர்க்கரை இறக்குமதி அவசியமாகிறது.

**வங்கி இல்லாத இடங்களில் முகவர்கள் மூலம் வங்கி சேவை: இந்தியன் வங்கி அறிமுகம்**

First Published : 28 Jan 2010 04:42:49 AM IST




புதுச்சேரி, ஜன. 27: வங்கி இல்லாத ஊர்களிலும் வங்கிச் சேவையை வழங்கும் நோக்குடன் இந்தியன் வங்கி சார்பில் ஸ்மார்ட் கார்டு என்ற மின்னணு அட்டை புதன்கிழமை அறிமுகம் செய்யப்பட்டது.

முகவர்கள் மூலம் வங்கிச் சேவை வழங்கும் இத் திட்டம்

நாட்டில் முதன் முதலாக புதுச்சேரியில் உள்ள செட்டிப்பட்டு கிராமத்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதலின்படி இந்த வசதி தொடங்கப்பட்டுள்ளது. டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் நிறுவனம் தகவல் தொழில்நுட்ப உதவி அளித்துள்ளது.

இந்திய ரிசர்வ் வங்கியின் செயல் இயக்குநர் வி.எஸ்.தாஸ் ஸ்மார்ட் கார்டுகளை வழங்கிப் பேசியது:

இந்த சேவை வங்கித் தொடர்பாளர் என்னும் சிறப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது. வங்கி வசதியற்ற, வங்கி குறைவான பகுதிகளில் வங்கித் தொடர்பாளர் என்கிற முகவர்களுக்கு இந்தியன் வங்கி அனுமதி அளிக்கும். இவர்கள் வங்கியின் சிறிய அளவிலான பணப் பரிவர்த்தனைக்கான அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளாக செயல்படுவர்.

அந்தப் பகுதிகளில் உள்ள சுயஉதவிக் குழுக்கள், மளிகைக் கடைகள், ஓய்வுபெற்ற வங்கி ஊழியர்கள், பொது தொலைபேசி நிலையங்கள், பெட்ரோல் பங்குகள் போன்றவை வங்கித் தொடர்பாளர்களாக பணியாற்றலாம்.

வங்கித் தொடர்பாளர்கள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளில் வங்கிச் சேவை வழங்க வேண்டும். வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட ஸ்மார்ட் கார்டை பயன்படுத்துவதற்கான கருவியை வங்கித் தொடர்பாளர் வைத்திருப்பார்.

இக் கருவி மூலம் முகவரிடமே பணம் செலுத்தலாம், பெறலாம். பணம் பெறும்போதும், செலுத்தும்போதும் உடனடியாக ரசீது (தமிழ் மற்றும் ஆங்கிலம்) வழங்கப்படும்.

அப்போது எவ்வளவு பணம் எடுக்கப்பட்டது மற்றும் செலுத்தப்பட்டது என்று கருவியில் குரல் ஒலிக்கும். இதனால் வாடிக்கையாளரை வங்கித் தொடர்பாளர்கள் ஏமாற்ற வாய்ப்பில்லை. எல்லா பணப் பரிமாற்றமும் இணையம் சார்ந்து இருப்பதால், அவை உடனடியாக வாடிக்கையாளர் கணக்குகளில் பதிவு செய்யப்படுகிறது. வங்கி கிளைகளிலும் இந்த கார்டை பயன்படுத்தலாம்.

பாமர மக்கள், சிறிய அளவிலான தொகையை  பாதுகாப்பாக செலுத்தி, எடுக்க விரல்பதிவு முறையில் இந்த சேவை இயக்கும். வாடிக்கையாளர்களின் வீடுகளுக்கு அருகிலேயே இந்த சேவை கிடைக்கும். அவர்கள் நேரத்தையும், பணத்தையும் செலவிட்டு வங்கிக் கிளைகளுக்கு   செல்லவேண்டியதில்லை என்றார்.

இந்தியன் வங்கி திருக்கனூர் கிளை சார்பில் செட்டிப்பட்டு கிராம பெண்ணுக்கு ஸ்மார்ட் கார்டு வழங்குகிறார் இந்திய ரிசர்வ் வங்கியின் செயல் இயக்குநர் வி.எஸ்.தாஸ் (நடுவில்).

### மேட்டூர் நீர்மட்டம் 78.10 அடி

First Published : 27 Jan 2010 12:45:42 AM IST

சேலம், ஜன. 26: மேட்டூர் அணை நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 4 மணி நிலவரப்படி 78.10 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 1,096 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து விநாடிக்கு 8,005 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டது. அணை நீர் இருப்பு 40.08 டி.எம்.சி.

### பயிர் அறுவடை சோதனை: கண்காணிக்க குழுக்கள் அமைப்பு

First Published : 27 Jan 2010 12:54:48 PM IST

தஞ்சாவூர், ஜன. 26: தஞ்சாவூர் மாவட்டத்தில் பயிர் அறுவடை சோதனைகள் அரசின்

அறிவுறுத்தல்படி நடத்தப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க மாவட்ட அளவிலும், வட்டார அளவிலும் கண்காணி ப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் எம்.எஸ். சண்முகம் செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

மாவட்ட அளவிலான குழுவில் மாவட்ட வருவாய் அலுவலர், வேளாண்மை இணை இயக்குநர், மாவட்ட புள்ளிய ல் துறை உதவி இயக்குநர், உழவர் விவாதக் குழு அமைப்பாளர் சங்கத் தலைவர் மற்றும் பயிர்க் காப்பீட்டுத் திட்ட மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

வட்டார அளவிலான கண்காணிப்புக் குழுவில் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர், மண்டலத் துணை வட்டா ட்சியர், வட்டாரப் புள்ளியல் ஆய்வாளர் மற்றும் வட்டாரத்திலுள்ள முன்னோடி விவசாயி ஆகியோர் செயல்படுவா ர்கள்.

இக் குழுக்கள் வட்டார அளவில் நியமிக்கப்பட்டிருந்தாலும் அதிக சேதத்திற்குள்ளான  தஞ்சாவூர், திருவையாறு, பூதலூர் ஆகிய வட்டாரங்களில் சிறப்பு அலுவலர் சேர்க்கப்பட்டு, பயிர் அறுவடை சோதனை தீவிரமாகக் க ண்காணிக்கப்படும்.

தேசிய பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் இழப்பீடு தொகை, ஒவ்வொரு பிர்க்காவிலும் நடத்தப்படும் 10 பயிர் அறுவ டை சோதனை மகசூல் மற்றும் 3 ஆண்டுக்கான மகசூலை வைத்துக் கணக்கிடப்படுகிறது. எனவே, பயிர் அறுவடை சோதனையின் முக்கியத்துவத்தை உணர்ந்து, அவை முறையாக நடைபெறுவதைக் கண்காணிப்பதற்கான இக் க ண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## 1.65 லட்சம் கோழிகளுக்கு கழிச்சல் தடுப்பூசி

First Published : 28 Jan 2010 02:43:20 AM IST

திருவண்ணாமலை, ஜன.27: திருவண்ணாமலை மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் 1.65 லட்சம் கோழிகளுக்கு இரு வார காலம் கழிச்சல் தடுப்பூசி போடும் பணி நடைபெறுகிறது.

மாவட்டத்தில் ஆண்டுதோறும் பிப்ரவரி மாதத்தில் அனைத்து நகர, கிராமப்புறங்களில் உள்ள கோழிகளுக்கு கழிச்சல் தடுப்பூசி போடும் பணி நடைபெறும். நடப்பாண்டு 1.65 லட்சம் கோழிகளுக்கு தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதன்படி வரும் பிப்.2-ம் தேதி முதல் 15-ம் தேதி வரை இரு வாரம் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் கோழிகளுக்கு கழிச்சல் தடுப்பூசி போடும் பணி நடைபெறும். அப்போது கோழிகள் வளர்க்கும் விவசாயிகள் அருகில் உள்ள கால்நடை மருந்தகத்துக்கோ, கிளை நிலையங்களுக்கோ சென்று தொற்று நோய்கள் வராமல் இருக்க தடுப்பூசி போட்டுக் கொள்ளலாம் என கால்நடை பராமரித்துறை தெரிவித்துள்ளது.

## மலிவு விலையில் துவரம் பருப்பு விற்பனை

First Published : 28 Jan 2010 12:52:51 AM IST

கள்ளக்குறிச்சி, ஜன.27: சிறப்பு பொது விநியோக திட்டத்தின் கீழ் துவரம் பருப்பு விற்பனையை மண்டல மேலாளர் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கிடங்கில் தொடங்கி வைத்தார்.

÷கள்ளக்குறிச்சி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கிடங்கில் தமிழக அரசின் சிறப்பு பொது விநியோக திட்டத்தின் கீழ் அரசின் தொலைநோக்கு பார்வையில் குறைந்த விலையில் ரேஷன் அட்டைக்கு 1 கிலோ துவரம் பருப்பு ரூ.65, 60, கனடாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பருப்பு ரூ. 50 என பொதுமக்கள் பயன்பெறும் வகையில் இத் திட்டத்தை அரசு அறிவித்துள்ளது.

÷விழுப்புரம் மாவட்டத்தில் கள்ளக்குறிச்சியில் முதல் கட்டமாக விற்பனை புதன்கிழமை தொடங்கப்பட்டது. இந் நிகழ்ச்சிக்கு, தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கிடங்கு மண்டல மேலாளர் எம்.குணசேகரன் தொடங்கி வைத்தார்.

÷துணை மேலாளர் தரக் கட்டுப்பாடு ஆர்.கோபால், உதவித் தர ஆய்வாளர் எஸ்.சோலைமுத்து, கள்ளக்குறிச்சி குடிமைப் பொருள் ஆய்வாளர் ஆர்.தசரதராஜன் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.

**காய்-கனி உற்பத்தியில் இந்தியா 2-ம் இடம்**

First Published : 28 Jan 2010 12:00:00 AM IST



சென்னை, ஜன. 27: காய்,கனி உற்பத்தியில் உலக அளவில் இந்தியா 2}ம் இடம் வகிக்கிறது என்று மத்திய வேளாண் துறை இயக்குநர் பி.கே.ஸ்வைன் தெரிவித்தார்.

இந்திய தொழில் கூட்டமைப்பு சார்பில் விவசாய உற்பத்தி பொருள்களுக்கான தேவைகள் மற்றும் சவால்கள் என்ற தலைப்பில் சென்னையில் அண்மையில் கருத்தரங்கம் நடந்தது.

இதில் பி.கே. ஸ்வைன் பேசியது: காய்கறிகள் மற்றும் பழ உற்பத்தியில் உலக அளவில் சீனா முதலிடத்தில் உள்ளது. அதற்கு அடுத்தப்படியாக இந்தியா அதிகளவில் உற்பத்தி செய்கிறது. ஒரு ஆண்டின் உலகத்தின் மொத்த பழ உற்பத்தி 51.2 கோடி மெட்ரிக் டன் ஆகும். சீனாவில் 9.4 கோடி மெட்ரிக் டன்னும், இந்தியாவில் 6.3 கோடி மெட்ரிக் டன்னும் பழம் உற்பத்தி செய்யப்படுகிறது. இதற்கு அடுத்தப்படியாக பிரேசில், அமெரிக்கா, இத்தாலி ஆகிய நாடுகள் இடம் பெற்றுள்ளன.

இதேபோல் சீனாவில் 44.8 கோடி மெட்ரிக் டன், இந்தியாவில் 12.5 கோடி மெட்ரிக் டன் காய்கறிகள் உற்பத்தியாகின்றன. இதற்கு அடுத்தப் படியாக அமெரிக்கா, துருக்கி, ரஷ்யா உள்ளிட்ட நாடுகள் இடம்பெற்றுள்ளன. ஒரு ஆண்டின் உலக மொத்த காய்கறிகள் உற்பத்தி 94.6 கோடி மெட்ரிக் டன்னாகும்.

உலக அளவில் அதிக அளவில் விளை பொருள்களை உற்பத்தி செய்யும் இந்தியாவில் அதனை விற்பனை செய்ய அனைத்து வசதிகளுடன் கூடிய நவீன சந்தையை ஏற்படுத்தித் தருவது அவசியமாகும்.

இவ்வாறு இல்லாததால் விளை பொருள்கள் அதிக அளவில் சேதாரமாகிறது. அதாவது இந்தியாவில் 40 சதவீதம் வரை காய்}கனிகள் சேதமடைவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இதைத் தடுக்க இந்தியாவில் இப்போது குளிர் சாதன வசதிகளுடன் கூடிய சரக்கு இருப்பு வைக்கும் அறைகளை உள்ளடக்கிய நவீன விளைபொருள் வணிக வளாகம் அமைக்கப்பட்டு வருகிறது என்றார்.

## பயிர்க் கடனாக ரூ.16,109 கோடி

First Published : 28 Jan 2010 02:20:45 AM IST




சென்னை, ஜன.27: ""2010}2011}ம் ஆண்டுக்கான திட்ட மதிப்பீட்டில் பயிர்க் கடன் வழங்கும் அளவு ரூ.16,109 கோடியாக இருக்கும்" என்று "நபார்டு' வங்கி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இது, நிகழ் நிதியாண்டுக்கான அளவை விட, 11 சதவீதம் அதிகம் என்றும் கூறியுள்ளது.

விவசாயம் மற்றும் கிராமப்புற வளர்ச்சிக்குத் தேவையான நிதி உதவிகளை "நபார்டு' வங்கி செய்து வருகிறது. மாவட்டங்களில் எந்த அளவுக்கு கடனுதவி செய்ய வாய்ப்புகள் உள்ளன என்பது ஒவ்வொரு நிதியாண்டிலும் மதிப்பிடப்படுகிறது.

நிதிக்கான மதிப்பீட்டின் போது, மாவட்டத்தில் இருக்கும் மனித வளம், அடிப்படை கட்டுமான வசதிகள், கடனுதவி செய்யும் நிதி அமைப்புகளின் வளம் ஆகியன கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

விவசாயம் மற்றும் இதர பிரிவுகள் சார்ந்த கடன் திட்டம், வளம் சார்ந்த கடன் திட்டம் என அழைக்கப்படுகின்றன. இந்தத் திட்டத்துக்கான கடனுதவி குறித்து, சென்னையில் புதன்கிழமை நபார்டு வங்கி வெளியிட்ட மாநில மேம்பாட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2010}2011 ஆண்டுக்கான திட்ட மதிப்பீட்டில் பயிர்க் கடன்களின் அளவு ரூ.16,109 கோடியாகும். இது, நடப்பு நிதியாண்டுக்கான அளவை விட 11 சதவீதம் அதிகம். பண்ணை சாரா பிரிவுக்கான கடனளவு ரூ.12,683 கோடி.

விவசாயக் கடன் பிரிவில், நீர்வளத் தேவைக்கான கடனுதவி மதிப்பீடு ரூ.692 கோடி என கணக்கிடப்பட்டுள்ளது. நிலவள மேம்பாட்டுக்கான மதிப்பீடு ரூ.515 கோடியாகவும், விவசாயத் துறை சார்ந்த இயந்திரங்களுக்கான கடனுதவி ரூ.978 கோடியாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

முக்கிய அம்சங்கள்: விவசாயப் பொருள்களை உற்பத்தி செய்பவர்களையும், வங்கிகளையும் "கூட்டு பொறுப்புக் குழுக்கள்' மூலம் இணைக்கலாம்.

ஏரி, குளங்கள் சீரமைப்பு, மழை நீர் சேகரிப்பு முறைகள் போன்றவற்றுக்கு மாநில மேம்பாட்டு அறிக்கையில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

மாநிலத்தின் விவசாயம் செய்யும் தகுதியுடைய நிலப்பரப்பில் 12 சதவீதம் விளைவிக்கப்படும் பழத்தோட்டப் பயிர்களின் விளைச்சலை அதிகரிப்பது அவசியம்.

உயர்தர பட்டு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தமிழகம், நோய் தாக்குதலுக்கு உட்படாத பட்டுப் புழுக்கள் உற்பத்திக்கு வழிவகுக்கும் முறைகளை பிரபலப்படுத்த வேண்டும்.

மீன் உற்பத்தி, பால் கொள்முதல் ஆகியவற்றை பெருக்குவதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மேம்பாட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், கிராமப்புற வேலைவாய்ப்புகளைப் பெருக்கும் வகையில் இளைஞர்களுக்கு சுய தொழில் தொடங்க வாய்ப்புகளை அதிகரிக்க வேண்டும் என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## விவசாயிகள் ஒத்துழைத்தால் சமஸ்தான பருப்பு அறிமுகப்படுத்தப்படும்

First Published : 27 Jan 2010 12:51:38 PM IST

ஆலங்குடி, ஜன. 26: புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் ஒத்துழைத்தால் சமஸ்தானத்தை போற்றும் விதமாக சமஸ்தான பருப்பு அறிமுகப்படுத்தப்படும் என்றார் மாவட்ட ஆட்சியர் ஆ. சுகந்தி.

ஆலங்குடி அருகேயுள்ள திருவரங்குளத்தில் 61- வது குடியரசு தினத்தையொட்டி

செவ்வாய்க்கிழமை கிராம சபைக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் ஆட்சியர் பேசியது:

தற்போது மேற்கொள்ளப்படும் பயிர்களின் அறுவடைக்குப்பிறகு உளுந்து உள்ளிட்ட பருப்பு சாகுபடியினை அதிகமாக மேற்கொண்டால்தான் அதன் விலை உயர்வை கட்டுப்படுத்த முடியும். ஆகையால், பருப்பு சாகுபடி க்கான இலவச மற்றும் மானிய விலையில் விதை மற்றும் உரம் வழங்குவதற்கும், வங்கியில் கடன் அளிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், உற்பத்திப்பொருளை வெளிச் சந்தையைவிட ஒரு ரூபாய் அதிக விலைக்கு கொ ள்முதல் செய்யப்படும்.

அதன்படி இம்மாவட்டத்தில் அபரிமிதமாக பருப்பு விளைய விவசாயிகள் ஒத்துழைத்தால் மாவட்டத்துக்கு மேலும் புகழ் சேர்க்கும் வகையில் சமஸ்தான பருப்பு அறிமுகப்படுத்தப்படும்.

குறைந்தது 500 குடும்ப அட்டைகள் இருந்தால்தான் தனி அங்காடி தொடங்கப்படும். அங்காடியில் நீண்ட நா ள்களாக உணவுப்பொருள் வழங்கவில்லை என்றாலும், கூலி ரூ. 100 ஆக உயர்த்தி வழங்கப்படும் தேசிய ஊரக வே லை உறுதி திட்ட பணியில் குறைபாடுகள் இருந்தாலும் 94441 81000 என்ற எனது அலைபேசியைத் தொடர்பு கொ ள்ளலாம்.

தமிழக அரசின் வீட்டு வசதித்திட்டத்தில் கான்கிரீட் வீடுகள் இலவசமாக கட்டிக்கொடுக்கும் பணிகள் மேற்கொ ள்ளப்படும்.

வீட்டுமனை இல்லாதவர்களுக்கு வாரிப்புறம்போக்கு தவிர பிற இடங்களில் 5 ஆண்டுகளாக குடியிருப்போருக்கு ப ட்டா வழங்க வடவடிக்கை எடுக்கப்படும் என்றார் ஆட்சியர் சுகந்தி.

கூட்டத்தில் ஒன்றிய ஆணையர் மு. மல்லிகா, வட்டார வளர்ச்சி அலுவலர் விஷ்வநாதன், ஊராட்சித் தலைவர் அ. கருப்பையா உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

இதேபோன்று திருவரங்குளம் ஒன்றியத்தில் வடகாட்டில் அதன் தலைவர் லெ. சின்னு, புள்ளான்விடுதி- விஜயராணி பன்னீர்செல்வம், நெடுவாசல் கிழக்கு-உமையாள் தட்சிணாமூர்த்தி, மேற்கு-ஏகராஜன்,மாங்காடு- டி. சு ப்பிரமணியன், எல்என்புரம்-கே. அடைக்கலம், கொத்தமங்கலம்-டி. ராமலிங்கம், குளமங்கலம் வடக்கு-ரா. தயாலன், தெற்கு ஆர். ரஞ்சித்குமார், பனங்குளம்- இறை.கருணாகரன், புதுக்கோட்டைவிடுதி-பாக்கியம்ராமசாமி, கே.வி. கோ

ட்டை, எஸ். மோகன், அரையப்பட்டி-மு. கணேசன், பாத்தம்பட்டி-ரா. அண்ணாத்துரை, நகரம். ப. நடராஜன், கீழாத்தூர்- உபகாரம், மேலாத்தூர்-சரவணன், திருக்கட்டளை-சாந்தி, கொத்தகோட்டை-டி. கருப்பையா, இசுகுப்பட்டி-மணிமுத்து, கைக்குறிச்சி-ஜி. ராஜலட்சுமி, களங்குடி- டி. முத்து, கல்லாலங்குடி. ஆர். ரத்தினவேல், கரும்பிரான்கோட்டை-வி. கமலம், கத்தகுறிச்சி-என். சூரியமூர்த்தி, காயம்பட்டி-ஆர் முருகேசன், கோவிலூர்- ஏ. சிங்காரம், கே. ராசியமங்கலம்- எம். குழந்தைதெரசா உள்பட அந்தந்த ஊராட்சியில் அதன் தலைவர் தலைமையில் கிராம சபைக்கூட்டம் நடைபெற்றது.

## மலிவு விலை துவரம் பருப்பு கடலூருக்கு 10 டன் ஒதுக்கீடு

First Published : 28 Jan 2010 12:55:29 AM IST

கடலூர், ஜன. 27: கடலூர் மாவட்டத்தில் நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் பொதுமக்களுக்கு மலிவு விலையில் விநியோகிக்க, 10 டன் துவரம் பருப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது.

÷மக்கள் அதிகம் பயன்படுத்தும் துவரம் பருப்பு விலை கடுமையாக உயர்ந்து வருகிறது. மக்களுக்கு நியாயமான விலையில் துவரம் பருப்பு கிடைக்க தமிழக அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் ரேஷன் அட்டைகளுக்கு துவரம் பருப்பு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது.

÷கடலூர் மாவட்டத்தில் மலிவு விலை துவரம் பருப்பு விற்பனை புதன்கிழமை தொடங்கப்பட்டது. நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கடலூர், நெய்வேலி அமுதம் அங்காடிகளிலும், ரேஷன் மண்ணெண்ணெய் விற்பனை நிலையங்களிலும் புதன்கிழமை துவரம் பருப்பு விற்பனை தொடங்கியது.

÷இதுகுறித்து கடலூர் நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல முதுநிலை மேலாளர் சேகர் கூறுகையில், மலிவு விலை துவரம் பருப்பு முதல் ரகம் கிலோ ரூ.65-க்கும், 2-வது ரகம் ரூ.60-க்கும், இறக்குமதி செய்யப்பட்ட 3-வது ரகம் ரூ.50-க்கும் விற்பனை செய்யப்படும். ரேஷன் கார்டுகளுக்கு மாதம் ஒரு கிலோ துவரம் பருப்பு வழங்கப்படும்.

÷முதல் கட்டமாக அமுதம் அங்காடிகளிலும், மண்ணெண்ணை விற்பனை நிலையங்களிலும், மலிவு விலை துவரம் பருப்பு கிடைக்கும். தற்போது முதல் இரண்டு ரகங்கள் துவரம் பருப்பு மொத்தம் 10 டன் வரவழைக்கப்பட்டு உள்ளது.

÷3-வது ரகம் துவரம் பருப்பு வரஇருக்கிறது. ரேஷன் கடைகள் மூலம் விற்பனை செய்ய துவரம் பருப்பு தேவை குறித்து கூட்டுறவுத் துறை தெரிவித்தால் வழங்கத் தாயாராக இருக்கிறோம் என்றும் தெரிவித்தார்.

## 29ல் விவசாயிகள் முறையீட்டு கூட்டம்

First Published : 27 Jan 2010 01:14:33 AM IST

திருப்பூர், ஜன.26: திருப்பூர் வருவாய் கோட்டத்துக்கு உட்பட்ட திருப்பூர், பல்லடம், அவிநாசி தாலுகா விவசாயிகளின் பிரச்னைகளை தீர்ப்பது தொடர்பான விவசாயிகள் முறையீட்டுக் கூட்டம் திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை (ஜன.29) காலை 11 மணிக்கு நடக்க உள்ளது.

இக்கூட்டத்தில் திருப்பூர் கோட்ட விவசாயிகள் தங்கள் பிரச்னைகள் குறித்து மனுக்கள் அல்லது நேரிலும் முறையிடலாம் என்று கோட்டாட்சியர் சையதுஹுமாயன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 7 ஆயிரம் ஏக்கரில் நெல் அறுவடை செய்ய முடியமால் விவசாயிகள் தவிப்பு

First Published : 28 Jan 2010 04:41:11 AM IST



கடலூர், ஜன. 27: வீராணம் ஏரியின் மேற்குக் கரையில் உள்ள 7 ஆயிரம் ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டு இருக்கும் சம்பா நெல்லை அறுவடை செய்ய முடியாமல் விவசாயிகள் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறார்கள்.

வீராணம் ஏரியின் மேற்குக் கரையில் சித்தமல்லி, அறந்தாங்கி, அகரம்புத்தூர், மணவெளி உள்ளிட்ட 11 கிராமங்களில் சுமார் 12 ஆயிரம் ஏக்கரில் ஆழ்குழாய்க் கிணறுகள் மூலம் நெல், வாழை, கரும்பு உள்ளிட்ட பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு உள்ளன. மேலும் 2 ஆயிரம் ஏக்கரில் தேக்கு மரக்கன்றுகள் உற்பத்தி செய்யும் விவசாயமும் நடந்து வருகிறது.

ஆனால் மழைக் காலத்தில் வீராணம் ஏரிக்கு மழைநீர் வரும் செங்கால் ஓடையால் பல ஆயிரம் ஏக்கர் விளை நிலங்களில் தண்ணீர் புகுந்து பாதிப்பை ஏற்படுத்துவதாக விவசாயிகள் புகார் தெரிவிக்கிறார்கள்.

மேலும் காவிரியில் இருந்து வீராணத்துக்குத் தண்ணீர் விடும் காலங்களில் ஏரியின் நீர் மட்டத்தை 43 அடிக்கு மேல் உயர்த்தும் போதும்,மேற்குக் கரையில் உள்ள விளை நிலங்களில் தண்ணீர் புகுந்து விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுத்துவதாக விவசாயிகள் புகார் தெரிவிக்கிறார்கள்.

வீராணம் ஏரியின் மேற்குக் கரை பொதுப்பணித் துறையினரால் முறையாகப் பராமரிப்படாததே, பாதிப்புக்குக் காரணம். வீராணம் ஏரியை ரூ. 110 கோடியில் சீரமைக்கும் போது, மேற்குக் கரையில் 26 இரும்பு ஷட்டர்கள் அமைக்கப்பட்டன. ÷மழைநீர் வரும்போது திறந்து கொள்ளும் வகையிலும், ஏரியின் நீர் மட்டம் உயரும்போது மூடிக் கொள்ளும் வகையிலும் ஷட்டர்கள் அமைக்கப்பட்டு இருந்தன. ÷ஆனால் ஷட்டர்கள் எல்லாம் திருட்டுப் போய் பல ஆண்டுகள் ஆகிவிட்டன.

வீராணம் ஏரியின் நீர் மட்டம் திங்கள்கிழமை 46.4 அடியாக உள்ளது.

மேட்டூர் அணை விரைவில் மூடப்படும் என்பதால், ஏரியின் நீர் மட்டத்தை உயர்த்ததுவதில் அதிகாரிகள் தீவிரமாக உள்ளனர். இதன் காரணமாக தற்போது அறுவடைக்குத் தயாராக இருக்கும் 7 ஆயிரம் ஏக்கர் சம்பா நெல் வயல்களில் 2 அடி உயரத்துக்குத் தண்ணீர் தேங்கி நிற்கிறது.

அறுவடை செய்ய இயந்திரமும் ஆள்களும் உள்ளே செல்ல முடியவில்லை என்று விவசாயிகள் புகார் தெரிவிக்கிறார்கள்.

இது குறித்து வீராணம் ஏரி பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் இளங்கீரன் கூறியது: வீராணம் ஏரியால் மேற்குக் கரை விவசாயிகளுக்குப் பயன் இல்லை. ஆனால் வீராணம் நீர்மட்டம் உயர்வதாலும், ஏரிக்கு வரும் மழை நீராலும் விவசாயம் பாதிக்கப்படுகிறது.

நன்றாக வளர்ந்து இருக்கும் பயிரை அறுவடை செய்ய முடியவில்லை.

பல ஆண்டுகள் புகார் செய்தும் இப்பிரச்னைக்குத் தீர்வுகாண, அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆண்டுதோறும் வெள்ளப் பாதிப்பைச் சந்திக்கிறோம்.÷முற்றிலும் பழுதடைந்து கிடக்கும் ஏரிக்கரையையும், ஏரிக்கு மழைநீர் வரும் செங்கால் ஓடையையும் சீரமைக்க வேண்டும் என்றார்.

தினமலர்

**வங்கக் கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு : கடலோர மாவட்டங்களில் மழை வாய்ப்பு**
ஜனவரி 28,2010,00:00 IST

சென்னை : ""தென்மேற்கு வங்கக் கடலில் புதிதாக காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளதால், தமிழகம் மற்றும் புதுச்சேரி கடலோர மாவட்டங்களில் அடுத்த 24 மணி நேரத்தில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது,'' என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வடகிழக்கு பருவமழை கடந்த ஆண்டு அக்டோபர் 26ம் தேதி துவங்கியது. தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஏழு கட்டங்களாக மழை பெய்தது. கடந்த டிசம்பர் மாதம் வரை வங்கக் கடலில் புதிதாக 'பயான்' மற்றும் "வார்டு' புயல்கள் உருவாகி, பலத்த மழை கொட்டியது. இதன்பின், வடகிழக்கு பருவமழை முடிவுக்கு வந்தது. ஆயினும், சிறிய, சிறிய காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக, தமிழகத்தில் ஒரு சில இடங்களில் மழை பெய்தது.

கடந்த டிசம்பர் 31ம் தேதியுடன் பருவமழை முடிவடைந்து, மார்கழி பனிப்பொழிவு துவங்கியது. கடந்த 8ம் தேதி தென்மேற்கு வங்கக் கடலில் உருவான புதிய காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக, சென்னை மட்டுமின்றி தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்தது.

அதன் பின், மீண்டும் பனிப்பொழிவு துவங்கியது. தினமும் மாலை 4 மணிக்கு துவங்கும் பனிப்பொழிவு, மறுநாள் காலை 8 மணி வரை காணப்படுகிறது. பகல் முழுவதும் அடிக்கும் வெயிலாலும், இரவு முழுவதும் பெய்யும் பனிப்பொழிவாலும் மக்கள் அவதிப்பட்டனர். மூடுபனியால் விமானங்கள் மற்றும் வாகனங்களின் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது.

இந்நிலையில், தென்மேற்கு வங்கக் கடலில் நேற்று புதிதாக காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளது. இதன் காரணமாக, நேற்று காலை முதல் சென்னை மற்றும் புறநகர்ப் பகுதியில் பெரும்பாலான இடங்களில் பலத்த மழை பெய்தது. அதிகபட்சமாக, மீனம்பாக்கத்தில் 2 மி.மீட்டரும், நுங்கம்பாக்கத்தில் 1 மி.மீ., மழை பதிவாகியது.
இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரி கூறுகையில்,"தென்மேற்கு வங்கக் கடலில் தமிழகத்திற்கும், இலங்கைக்கும் இடையே புதிதாக மெலிந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளது. இதன் காரணமாக, தமிழகம் மற்றும் புதுச்சேரி கடலோர மாவட்டங்களில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. சென்னை நகரில் சில இடங்களில் லேசான மழை பெய்யக் கூடும். உள்மாவட்டங்களில் வறண்ட வானிலையே நிலவும்' என்றார்.

**கோதுமை விலை குறைந்தது**

ஜனவரி 28,2010,03:21



புதுடில்லி: அதிகரித்து வரும் உணவுப் பொருட்களின் விலையேற்றத்தை கட்டுப்படுத்த, அரசு நடவடிக்கை எடுத்ததை தொடர்ந்து, கோதுமையின் விலை குவிண்டாலுக்கு 25 ரூபாய் குறைந்தது. அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரித்துக் கொண்டே வந்தது. இதை தடுக்க அரசு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்தது. இதன் ஒரு பகுதியாக, திறந்த சந்தையில், கோதுமையை ரிலீஸ் செய்வது என அரசு தீர்மானித்தது. இதைத் தொடர்ந்து, கோதுமையை கையிருப்பு வைத்திருந்த பலரும், அவற்றை விற்கத் துவங்கினர். இவ்வாறு, கோதுமை விற்பனை செய்பவர்களின் எண்ணிக்கை நேற்று அதிகரித்ததால், டில்லியில், கோதுமை விலை, குவிண்டாலுக்கு 25 ரூபாய் குறைந்தது. மேலும், தற்போது சாதகமான தட்ப வெப்பநிலை நிலவுவதால், நல்ல விளைச்சல் கிடைக்கும் என்ற நம்பிக்கையும், கோதுமையின் இந்த விலை சரிவிற்கு காரணமாக கருதப்படுகிறது.

**இரு நாளில் 20 காசு சரிவு: தமிழகம், கேரளாவில் முட்டை விலை 240 காசு**

ஜனவரி 28,2010,03:21



நாமக்கல்: தமிழகம், கேரளாவில் முட்டை விலை 240 காசாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இரு நாளில் முட்டை விலை 20 காசு சரிந்திருப்பது கோழிப் பண்ணையாளர்களை கவலையடைச் செய்துள்ளது. நாமக்கல்லில் தேசிய முட்டை விலை நிர்ணயக்குழு கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, ஏற்றுமதி குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர். 245 காசுக்கு விற்பனை செய்து வந்த முட்டை 5 காசு குறைத்து 240 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டை விலை இரு நாளில் 20 காசு சரிந்திருப்பது கோழிப் பண்ணையாளர்களை கவலையடைச் செய்துள்ளது. நாமக்கல்லில் நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டைக்கோழி விலை 25 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கறிக்கோழி கிலோ 57 ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டது.

**சிறுவிவசாயிகள் நிலை: அக்கறைப்படுகிறது ஐ.நா.,**

ஜனவரி 28,2010,00:00 IST

நியூயார்க்: "விவசாயம், வளர்ச்சியடைந்து வரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு முதுகெலும்பு. உலகளவில் காணப்படும், 50 கோடி சிறு விவசாயிகளின் நலனை பாதுகாக்க வேண்டியது அவசியம்' என, ஐ.நா., உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.ஐ.நா.,வின் விவசாய வளர்ச்சிக் கான சர்வதேச நிதிய தலைவர் கனாயோ எப்.நவான்சே கூறியதாவது:வளர்ச்சியடைந்து வரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு, சிறு விவசாயிகளை எவ்வாறு தனியார் துறையுடன் இணைப்பது என்பது குறித்து சில வழிகளை, சுவிட்சர்லாந்து நாட்டில் உள்ள தாவோசில், பெரிய தொழிலதிபர்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன்.ஐ.நா.,வின் விவசாய வளர்ச்சிக்கான சர்வதேச நிதியம், சிறு விவசாயிகளின் வளர்ச்சிக்காக தொடர்ந்து குரல் கொடுக்கும். ஏனென்றால், அவர்கள் விவசாய அமைப்பை மாற்றியமைத்து, பொருளாதார வளர்ச்சிக்கு உதவுகின்றனர்.

வளரும் நாடுகளில் தனியார் துறை விவசாயத்தில் முக்கியத்துவம் பெற்றது. விவசாயத்துறையின் வளர்ச்சிக்கு நீண்ட கால முதலீடு அவசியமாகிறது. அதாவது, அவர்களுக்கு தேவையான சாலைவசதிகள், மூலப்பொருட்கள், சந்தை தொடர்புகள் மற்றும் தகவல்கள் உட்பட அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளையும் அளிக்க வேண்டும்.நகரத்தில் இருக்கும் மக்கள் பேரழிவுகளால் பாதிக்கப்பட்டு, <உணவுக்காக, நகர்ப்புறத்தில் இருந்து கிராமப்புறத்தை நோக்கி படையெடுப்பது ஏற்கனவே துவங்கி விட்டது. இதனால், குறைந்த வளத்துடன் காணப்படும் கிராமப் பொருளாதாரத்தின் மீது அதிக நெருக்கடி ஏற்பட்டுள்ளது.இவ்வாறு நவான்சே கூறினார்.சுவிட்சர்லாந்து நாட்டில் நடக்கும் பொருளாதார கூட்டத்திற்கு, கிராமப்புற ஏழ்மை குறித்து கவனித்து வரும் ஐ.நா.,அமைப்பிற்கு முதல் முறையாக அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**கேரள அரசு பாம்பாற்றில் அணை கட்டினால் அமராவதி அணை பாலைவனமாக மாறும் : பாசன விவசாயிகள் கூட்டத்தில் ஆவேசம்**

உடுமலை : "கேரள அரசு பாம்பாற்றின் குறுக்கே அணை கட்டினால் அமராவதி பகுதி பாலைவனமாக மாறிவிடும்' என பாசன விவசாயிகள் கூட்டத்தில் ஆவேசத்துடன் கூறினர்.உடுமலை அருகேயுள்ள அமராவதி அணைக்கு பெருமளவு நீர்வரத்துள்ள பாம்பாற்றின் குறுக்கே கேரளா அரசு 230 கோடி ரூபாய் செலவில் அணை கட்ட திட்டமிட்டுள்ளது.இது குறித்து விவாதிக்க, அமராவதி பாசன விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு கூட்டம் நேற்று நடந்தது. அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை கரும்பு விவசாயிகள் சங்க தலைவர் வேலுசாமி தலைமை வகித்தார். பொது செயலாளர் எம்.எல்.ஏ.,சண்முகவேலு முன்னிலை வகித்தார்.உடுமலை, தாராபுரம், சின்னதாராபுரம் கரூர் பகுதி, பழைய, புதிய ஆயக்கட்டு விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

**கல்லாபுரம் ராமகுளம் வாய்க்கால் பாசன விவசாயிகள் சங்க தலைவர் மாரியப்பன் பேசும்போது**, "அமராவதி அணைக்கு 60 சதவீதம் வரை நீர் வரத்து பாம்பாற்றின் மூலமே கிடைக்கிறது. அமராவதி அணையின் உப நதிகளாக உள்ள எட்டு ஆறுகளின் குறுக்கே அணை கட்டியதால், கரூர் வரை உள்ள பாசனம் மற்றும் குடிநீர் ஆதாரத்திற்கு அணையையே நம்பியிருக்க வேண்டியதுள்ளது.காவிரியின் துணை நதியாக உள்ளதால், நடுவர் மன்ற தீர்ப்பில் அமராவதியிலிருந்து 3 டி.எம்.சி., தண்ணீர் கொடுக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டது. இது குறித்து வழக்கு உச்சநீதிமன்றத்தில் உள்ள நிலையில், 3 டி.எம்.சி.,நீர் தந்தால் அமராவதி பகுதிகள் கடுமையாக பாதிக்கும் என விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்திய நிலையிலும், தமிழக அரசு காவிரி நடுவர் மன்றத்தில் அமராவதி அணை குறித்து அப்பீல் செய்யவில்லை.

**அமராவதி பழைய ஆயக்கட்டு பாசனத்திற்கு 16.5 டி.எம்.சி.,;** புதிய ஆயக்கட்டு கட்டு பாசனத்திற்கு 4.97 டி.எம்.சி., மற்றும் குடிநீர், தொழிற்சாலை தேவைக்கு மொத்தம் 18.636 டி.எம்.சி., தண்ணீர் தேவை உள்ளது என தமிழக அரசு

தொழில்நுட்ப ஆலோசகரே தெரிவித்துள்ளார். ஐந்தாண்டு சராசரியாக ஆண்டுக்கு எட்டு டி.எம்.சி., தண்ணீர் மட்டுமே அணைக்கு வந்துள்ளது.பாம்பாற்றின் குறுக்கே கேரளா அரசு அணை கட்டுவதோடு, குளிர்பான நிறுவனங்களுக்கு தண்ணீர் பயன்படுத்தும் உரிமையை வழங்க திட்டமிட்டுள்ளதாக தெரிகிறது. இதனால், அமராவதி பாலைவனமாகி; செம்மறி ஆடு, கருவேலம்முள் பட்டியே அமராவதி விவசாயிகளின் வாழ்க்கையாக மாறி விடும் அபாயம் உள்ளது' என்றார்.

**அமராவதி கரும்பு விவசாயிகள் சங்க செயலாளர் ஈஸ்வரன்,"** பல்வேறு அரசியல் கட்சிகள் அமராவதியை காப்பாற்ற போராட்டம் நடத்தி வரும் நிலையில், அமராவதி விவசாயிகள் அமைதியாக இருக்காமல் அரசின் கவனத்திற்கு இப்பிரச்னையை எடுத்து செல்லும் வகையில் போராட்டங்கள் நடத்த வேண்டும்' என்றார்.புதிய ஆயக்கட்டு பாசன விவசாயிகள் சங்க தலைவர் பார்த்தசாரதி, "விவசாயிகள் சார்பில், மாவட்ட அமைச்சர் மற்றும் முதல்வரிடம் நேரடியாக மனு அளிக்க வேண்டும். அதற்கு பின்னரும் நடவடிக்கை இல்லையென்றால், மத்திய, மாநில அரசுகளின் கவனத்தை ஈர்க்கும் வகையில் போராட்டங்கள் நடத்தப்பட வேண்டும்' என்றார்.

விவசாய சங்க பிரதிநிதிகளின் கருத்துக்களின் அடிப்படையில், மாவட்ட கலெக்டர் மற்றும் மாவட்ட அமைச்சர், தமிழக முதல்வர் ஆகியோரிடம் நேரில் மனு அளிப்பது எனவும், தொடர்ந்து அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் வழக்கமான போராட்ட வடிவில் இல்லாமல், மூன்று மையங்களில் மறியல் போராட்டம் மற்றும் தொடர் போராட்டங்கள் நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.உடுமலையில் இருந்த திருப்பூர் மாவட்ட கலெக்டர் சமயமூர்த்தியிடம் விவசாயிகள் மனு அளித்தனர்.

**விவசாயிகளுக்கு விதை உற்பத்தி தொழில் நுட்ப பயிற்சி முகாம்**

பெ.நா.பாளையம் : பெரியநாயக்கன்பாளையத்தில் விதைக்கிராமத் திட்டத்தில் தரமான விதை உற்பத்தி தொழில்நுட்ப பயிற்சி முகாம் நடந்தது.பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியத்திற்குட்பட்ட ஒன்னிபாளையம், ஆனைகட்டி கிராமங்களில் தலா 50 விவசாயிகளுக்கு தரமான விதை உற்பத்தி தொழில் நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டது. கூட்டத்தில், விதைச்சான்று உதவி இயக்குனர் மற்றும் விதைச்சான்று அலுவலர்கள் பங்கேற்று, விதைப்பண்ணை அமைப்பதில் விதைப்பு முதல் விதை சேமிப்பு வரையான அனைத்து தொழில் நுட்பங்களையும் விளக்கினர். நடைமுறை பணிகளையும் எடுத்துக் கூறினர்.

முகாமில், பெரியநாயக்கன்பாளையம் வேளாண்மை உதவி இயக்குனர் வசந்தரேகா பேசுகையில்,""விதைக் கிராம திட்டத்தில் விதைக் கொள்முதல் மானியமாக கிலோவுக்கு 10 ரூபாயும், வினியோக மானியமாக கிலோவுக்கு 20 ரூபாயும் வழங்கப்படுவதாக'' தெரிவித்தார்.

செல்வபுரத்தில் நடந்த பயிற்சிமுகாமில், கூடலூர் பேரூராட்சி தலைவர் ரங்கசாமி, ஒன்னிபாளைய முகாமில் பிளிச்சி ஊராட்சி தலைவர் பிருந்தா, ஆனைகட்டி முகாமில் எண். 24 வீரபாண்டி ஊராட்சி தலைவர் செந்தில் உள்ளிட்ட விவசாயிகள் பங்கேற்றனர்

**பயறுவகை விளைச்சலை பெருக்க பாதுகாப்பு அவசியம் : வேளாண் உதவி இயக்குனர் தகவல்**

பேரூர் : ""ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறையை பின்பற்றி பயறுவகை பயிர்களை சாகுபடி செய்வதன் மூலம் அதிக லாபம் பெறலாம்,'' என, வேளாண்மை உதவி இயக்குநர் ஜெயஸ்ரீ கூறினார்.

தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின் 2009-10ன் கீழ் பயறுவகைகள் உழவர்வயல்வெளிப்பள்ளி பயிற்சி முகாம் காளியண்ணன் புதூரில் நடந்தது. வேளாண்மை உதவி இயக்குநர் ஜெயஸ்ரீ பேசியதாவது:கோவை மாவட்டத்தில் 30 ஆயிரம் எக்டர் பரப்பளவில் பயறு வகைகள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. துவரை, உளுந்து, பாசிப்பயறு, தட்டைப்பயறு, அவரை முதலியன இறவை மற்றும் மானாவாரியாகவும், ஊடுபயிராகவும் கலப்பு பயிராகவும்

சாகுபடி செய்யப்படுகிறது. குளிர்காலத்தில் கொண்டக்கடலை, கொள்ளு பயறுகளும் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.இப்பயறு வகைகளின் பல்வேறு வளர்ச்சிக்கட்டங்களில் புரோடீனியா தாய் அந்து பூச்சி, இனகவர்ச்சி பொறி, புரோடீனியா புழு ஆகியவற்றின் தாக்குதலால் பாதிக்கப்படுகின்றன. முக்கியமாக காய்ப்புழுக்களினால் அதிக அளவில் சேதம் ஏற்படுகிறது.

இதைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை விவசாயிகள் பின்பற்ற வேண்டும். பயறு வகை பயிர்களை பயிரிடும்போது உழவியல், கைவினை, உயிரியல், இரசாயனம் உள்ளிட்ட நான்கு முறைகளை தெரிந்து கொண்டு நோய், களை, நூற்புழு நிர்வாகங்களை அறிந்து பயிரிட்டால் பயறுவகை பயிர்களில் அதிக லாபம் பெறலாம்.இந்த முறைகளை விவசாயிகள் கடைப்பிடித்திட வாரம் இருமுறையென 20 வகுப்புகள் நடக்கும் பயறுவகைகள் உழவர்வயல்வெளிப்பள்ளி பயிற்சி முகாமில் பங்கேற்று பயன் அடையலாம்.இவ்வாறு வேளாண்மை உதவி இயக்குநர் ஜெயஸ்ரீ கூறினார். இதில், வேளாண் அலுவலர் கவிதா, அன்பழகி, உதவி வேளாண் அலுவலர்கள் முருகன், பாரதி, சிவகுமார், ஜெயபிரகாஷ், உதவி விதை அலுவலர் மோகன சுந்தரம் உள்பட திரளான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**இயந்திரத்தில் மக்காச்சோளம் அறுவடை தீவனப்பயிர்களுக்கு திடீர் தட்டுப்பாடு**

உடுமலை: இயந்திரங்கள் மூலம் மக்காச்சோள அறுவடையை மேற்கொள்ள விவசாயிகள் ஆர்வம் காட்டுவதால் கால்நடை தீவனங்களுக்கு  பயிர்கள் கிடைக்காமல் விலை உயர்ந்து வருகிறது.உடுமலை பகுதியில் பி.ஏ.பி., மற்றும் கிணற்றுப்பாசனத்திற்கு அனைத்து சீசன்களில் பல ஆயிரம் ஏக்கரில் மக்காச்சோளம் பயிரிடப்படுகிறது. வேலை உறுதியளிப்பு திட்டம் செயல்படுத்திய பின் மக்காச் சோள சாகுபடிக்கும் தொழிலாளர் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது.இதனால்,  மக்காச்சோளம் அறுவடை செய்வதற்கு இயந்திரத்தை தற்போது பயன்படுத்தி வருகின்றனர்.  பழநி மற்றும் ஒட்டன்சத்திரம் பகுதிகளிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ள இயந்திரத்தின் மூலம் அறுவடை செய்ய ஒரு மணி நேரத்திற்கு இரண்டாயிரம்  ரூபாய் வாடகை வசூலிக்கப்படுகிறது.

பல விவசாயிகள் இயந்திர அறுவடை முறையை பின்பற்றுவதால் பயிர்கள் வீணாகி தீவனத்திற்கு தட்டுப்பாடு ஏற்படும் நிலை உள்ளது. ஒரு ஏக்கர் மக்காச்சோள தட்டு கடந்தாண்டு  1,500 ரூபாய்க்கு விற்கப் பட்டது. தற்போது, 2,500 ரூபாயாக உயர்ந்துள்ளது. பால் கொள்முதல் விலை உயர்வு போன்ற காரணங் களால் மாடு வளர்ப்பு அதிகரித்துள்ளது. மாடுகளுக்கு தேவையான தீவனங்களை வாங்கி இருப்பு செய்ய பல மாவட்ட விவசாயிகள் உடுமலை பகுதியை முற்றுகையிட்டு, போதிய அளவு பயிர் கிடைக்காததால் ஏமாற் றமடைந்து திரும்பி செல்கின்றனர். தட்டுப்பாடு நிலவுவதால் அதிக விலைக்கு மக்காச்சோள தட்டுகளை வாங்கி டிராக்டரில் பல மடங்கு ஏற்றி செல்வதும் அதிகரித்துள்ளது.

**கரும்பு அறுவடை இயந்திரம்செயல்விளக்க பயிற்சி**

திட்டக்குடி :திட்டக்குடி அடுத்த பெண்ணாடம் அம்பிகா சர்க்கரை ஆலை நிறுவனத்தின் சார்பில் கரும்பு விவசாயிகளுக்கு கரும்பு அறுவடை இயந்திரத்தின் பயன்பாடுகள் குறித்த செயல்விளக்க பயிற்சி கரும்பு விவசாயி கோபாலகிருஷ்ணன் வயலில் நடந்தது. சர்க்கரை ஆலை துணை மேலாளார் (கரும்பு) கார்த்திக்ராஜா தலைமை தாங்கினார். கரும்பு அதிகாரி நடராஜன், ஆய்வாளர்கள் வசந்தகுமார், தெய்வசிகாமணி முன்னிலை வகித்தனர். ஆய்வாளர் ராஜேந்திரன் வரவேற்றார். சர்க்கரை ஆலை துணை பொது மேலாளர் (கரும்பு) செந்தில்குமார் கரும்பு அறுவடை இயந் திரத்தின் செயல்பாடுகள் குறித்த விளக்கமளித்து கரும்பு அறுவடையை துவக்கி வைத்தார்.

**காய்கறி விளைச்சலை அதிகரிக்க 'பசுமைகுடில்'விவசாயம் தீவிரம்**

கொடைக்கானல் : திறந்தவெளியில் விளையும் காய்கறிகளை விட, மூன்று மடங்கு மகசூல் அதிகரிக்கும் "பசுமை குடில்' விவசாயம் தற்போது மலைப்பகுதியில் தீவிரமடைந்து வருகிறது.

கொடைக்கானலில் நிலவும் குளிர்ந்த சூழ்நிலைக்கேற்ப காரட், உருளை,பூண்டு,பீன்ஸ்,பட்டாணி விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது.தொடர்மழை, தட்ப,வெப்ப மாற்றத்தால் ஒவ்வொரு ஆண்டும் லாபத்தை விட விவசாயிகள் நஷ்டத்தையே சந்தித்து வந்தனர். தற்போது காய்கறி விளைச்சலை அதிகரிக்க "பசுமைகுடில்' அமைத்து சாகுபடியில் மூன்று மடங்கு மகசூல் எடுப்பது பற்றிய விழிப்புணர்வு, ஆலோசனையை விவசாயிகளுக்கு தோட்டக்கலைத்துறையினர் வழங்கி வருகின்றனர். தற்போது கவுஞ்சியில் 3 ஆயிரம், கே.சி.பட்டியில் 2 ஆயிரம் சதுர அடியில் "பசுமைகுடில்' அமைத்து காய்கறி செடிகள் நடவு செய்யப்பட்டுள்ளது.
தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் கிஷோர் கூறுகையில்," குறைந்த இடத்தில் அதிக மகசூல் பெறுவதே இதன் முக்கிய நோக்கம். ஆயிரம் சதுரடியில் பசுமை குடில் அமைத்து, மலைப்பகுதியில் விளையும் அனைத்து வகையான காய்கறிகளையும்(உருளை தவிர்த்து) நான்கு மாதத்திலேயே மூன்று மடங்கு மகசூல் பெற முடியும்.குடிலின் உட்பகுதியில் பராமரிப்பு, ஈரப்பதம் சரியான அளவில் இருக்குமாறு பார்த்துக்கொள்ளவேண்டும். எல்லா மாதங்களிலும் பருவநிலைப்பற்றி கவலைப்படாமல் மகசூல் எடுத்துக்கொண்டே இருக்கலாம். குடில் அமைப்பதற்கு ஒருலட்சத்து 50 ஆயிரம் மானியமாக வழங்கப்படுகிறது' என்றார்.

**கத்தரி, பாகற்காய் விலை குறைவு**

திண்டுக்கல் : வரத்து அதிகரிப்பு காரணமாக திண்டுக்கல் காந்தி மார்க்கெட்டில் காய்கறி விலை குறைந்து வருகிறது.கிலோ 120 ரூபாய்க்கு விற்ற பட்டர் பீன்ஸ், சோயா விலை பாதியாக குறைந்துள்ளது.30 ரூபாய் க்கு விற்ற கத்தரி 24க்கும், 25க்கு விற்ற பாகற்காய் 18க்கும்,30க்கு விற்ற அவரைக்காய் 16க்கும்,120க்கு விற்ற முருங்கைக் காய் 100க்கும் குறைந்திருந்தன. தக்காளி 20, உருளை 20, கோஸ் 10,கேரட் 20, பச்சை மிளகாய் 20க்கு விற்றது.

**செல்வம் கொழிக்கும் பப்பாளி சாகுபடி**

வாடிப்பட்டி :வாடிப்பட்டி பகுதியில் லட்சங்களை அள்ளித் தரும் ""ரெட் லேடி" ரக பப்பாளி சாகுபடி செய்யப் பட்டுள்ளது.தைவான் நாட்டை பிறப்பிடமாக கொண்ட இந்த ரக பப்பாளி அதிகபட்சமாக 4 அடி உயரம் மட்டுமே வளரக்கூடியது. காய் ஒவ்வொன்றும் 3-5 கிலோ எடை கொண்டதாக இருக்கும். மதுரை, திருச்சி,கோயம்புத்தூர் போன்ற நகரங்களில் விற்பனை சந்தை உள்ளதால், அறுவடை செய்யப்படும் காய்களை உடனடியாக சந்தைப்படுத்த முடியும்.மேலும் இந்த காய்கள் 10 நாட்கள் வரை கெடாமல் இருக்கும்.ஒரு கிலோ பப்பாளி காய் ரூ.ஐந்துக்கு கொள்முதல் செய்யப்படுகிறது.மகசூல் பருவம் துவங்கியதிலிருந்து இரண்டு ஆண்டுகள் வரை மகசூல் தரகூடிய இந்த ரக பப்பாளிஒரு ஏக்கர் சாகுபடிக்கு ரூ.20 ஆயிரம் செலவாகும்.மகசூல் பருவத்தில் வாரம் இருமுறை

அறுவடை செய்யலாம். ஒவ்வொரு அறுவடையின் போதும் இரண்டு டன் காய் கிடைக்கும். இதன் மூலம் மாதம் ரூ.40 ஆயிரம் வரை வருமானம் பெறலாம். மகசூல் தரும் இரண்டுஆண்டுகளில் ரெட்லேடி பப்பாளி சாகுபடி செய்யும் விவசாயிக்கு பல லட்சம் வருவாய் கிட்டும்.சாகுபடி: பப்பாளி விதை பத்து கிராம் ரூ.ஆயிரத்து500க்கு கிடைக்கிறது.இதை பிளாஸ்டிக் பைகளில் இட்டு நாற்றுகளை உருவாக்க வேண்டும்.45 நாட்களுக்கு பிறகு நாற்றுகளை 8 அடிக்கு 8 அடி இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். ஆறு மாதத்தில் மகசூல் தர துவங்கும். ரெட்லேடி ரக பப்பாளி விதையில் அனைத்துமே மகசூல் தரும் பெண் மரம் என்பதால் விதைகள் பழுதாவதில்லை. விபரங்களுக்கு , 99769 17062 ல் தோட்டக்கலை துறையை அணுகலாம்.

**உணவுப்பொருள் வணிக வளாகம் ஜூனில் திறப்பு**

மதுரை: மதுரை சிக்கந்தர் சாவடியில், தமிழ்நாடு உணவுப்பொருள்வணிகவளாகம் ஜூனில் திறக்கப் படுகிறது. இதற்காக உழவு முதல் நுகர்வு வரை ஒருங்கிணைப்பை ஏற்படுத்த, "வேளாண் உணவுத் தொழில் வர்த்தக சங்கம்' ஆரம்பிக்கப் பட்டுள்ளது.இதன் தலைவர் ரத்தினவேல் கூறியதாவது : மரபணு விவசாயத் திற்கு மாற்றாக, இயற்கை வேளாண்மையை மீண்டும் கொண்டு வர முயற்சி செய்கிறோம். உணவு பொருட்கள் தயாரிப்பிற்கு நல்ல வரவேற்பு உள்ளது. இதில் உள்ள பிரச்னைகள் என்ன, இன்னும் என்ன தேவை என்பது குறித்து சங்கம் வழிகாட்டும். பொது பெயர் மூலம், உணவு பொருட்களை எப்படி ஏற்றுமதி செய்வது என்பதையும் தெளிவுபடுத்துவோம். இச்சங்கத்தில், விவசாயிகள், வியாபாரிகள், தொழிலதிபர்கள், நுகர்வோர், ஏற்றுமதியாளர்கள் ஆண்டிற்கு 300 ரூபாய் செலுத்தி, உறுப்பினராகி, உணவுப்பொருள் வணிக வளாகத்தை பயன்படுத்தலாம். இங்கு 26,000 டன் கொள்ளளவு வசதி உள்ளது. தவிர, 40,000 டன் கொள்ளளவு கொண்ட 250 டிப்போக்கள் உண்டு. குளிர்பதன கிடங்கு, பேக்கேஜ் உட்பட பல வசதிகள் உள்ளன. ஜூனில் திறக்கப்படுகிறது. சங்கத்தை நாளை மாலை 6.30 மணிக்கு, மதுரை ராஜா முத்தையா மன்றத்தில், மத்திய அமைச்சர் மு.க.அழகிரி துவக்கி வைக்கிறார் என்றார்.செயலாளர் ரமேஷ், துணைத் தலைவர் சுரேஷ் குமார், பொருளாளர் ராஜமோகன், வர்த்தக சங்கத் தலைவர் ஜெகதீசன் உடனிருந்தனர்.

**மாநில அளவில் மருத்துவ பயிர் சாகுபடி இன்று சேலத்தில் கருத்தரங்கு துவக்கம்**

சேலம்: சேலம் போஸ் மைதானத்தில் மாநில அளவிலான மருத்துவ பயிர்கள் சாகுபடி கருத்தரங்கு மற்றும் கண்காட்சி இன்று துவங்குகிறது. இது குறித்து வேளாண்மை உற்பத்தி ஆணையாளர் நந்தகி�ஷோர், தோட்டக்கலைத்துறை இயக்குனர் சந்திரமோகன், கலெக்டர் சந்திரகுமார் ஆகியோர் நிருபர்களிடம் கூறியதாவது: தமிழக அளவில் மருத்துவ பயிர்களின் சாகுபடி பரப்பு, விளைச்சல், உற்பத்தி திறனை அதிகரிக்க நவீன தொழில்நுட்பங்களை மேற்கொள்ள விவசாயிகளுக்கு பயிற்சி மற்றும் அரசின் மானிய சலுகைகள் குறித்து விளக்கம் அளிக்கும் வகையில் மருத்துவ பயிர்கள் சாகுபடி கருத்தரங்கு தமிழகத்தில் முதன் முறையாக சேலத்தில் நடத்தப்படுகிறது.

இக்கருத்தரங்கில் விவசாயிகளுக்கு மருத்துவ பயிர்களின் கொள்முதல் திறன் ஊக்குவித்தல், மருத்துவ பயிர்கள் சாகுபடியாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களை ஒரே இடத்தில் சந்திக்க செய்தல், ஏற்றுமதியை அதிகரிக்க வாய்ப்பை பெருக்கி அன்னிய செலவானியை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளல் குறித்து விளக்கப்படுகிறது. மத்திய அரசின் நேஷனல் மிஷன் மெடிசன் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் கடந்த 2008 - 2009ம் ஆண்டில் 6.28 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் 3,066 ஹெக்டேரில் மூலிகை பயிர் சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டது.

நடப்பாண்டில் 2009 -2010ல் 11.55 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு 3,945 ஹெக்டேரில் மூலிகை பயிர் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இது மத்திய அரசின் திட்டமாக இருந்தாலும் மாநில அரசே செயல்படுத்தி

வருகிறது.

விவசாயிகளுக்கு 20, 50, 75 சதவீதம் என மூன்று வகையில் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. தமிழகத்தில் 10 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில் மருத்துவ பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. சென்னா 3,110 ஹெக்டேர், குளோரியோசா 1,820 ஹெக்டேர், கோலியஸ் 2,220 ஹெக்டேர், நித்தியகல்யாணி 200 ஹெக்டேர் மற்றும் இதர மருத்துவ பயிர்கள் 2,650 ஹெக்டேரில் பயிரிடப்பட்டுள்ளது.

இந்த மூலிகை பயிர்கள் மதுரை, விருதுநகர், சேலம், திருநெல்வேலி, தூத்துக்குடி, ஈரோடு, தேனி, திருவண்ணாமலை, ராமநாதபுரம், உள்ளிட்ட மாவட்டங்களில் அதிக அளவில் பயிரிடப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் மருத்துவ பயிர்கள் 2,000 ஏக்கர் பரப்பில் சாகுபடி செய்யப்படுகிறது. கோலியாஸ் மருத்துவ பயிர் ஆத்தூர், கெங்கவல்லி, தலைவாசல், பெத்தநாயக்கன்பாளையம், வாழப்பாடி பகுதிகளிலும், குளோரியோசா என்ற கண்வலிக் கிழங்கு 100 ஹெக்டேர் பரப்பில் இடைப்பாடி, கொங்கணாபுரம், மகுடஞ்சாவடி பகுதிகளிலும் பயிரிடப்பட்டுள்ளது. சேலம் போஸ் மைதானத்தில் இன்று துவங்கும் மூலிகை பயிர்கள் கண்காட்சி ஜனவரி 31 வரை நடக்கிறது. இக்கண்காட்சியில் 12 அரசு துறை அரங்குகளுடன் 18 அரங்குகள் அமைக்கப்படுகின்றன. விவசாயிகளுக்கு மூலிகை பயிர் சாகுபடி குறித்து செயல் விளக்க பயிற்சியும் அளிக்கப்படுகிறது.இக்கண்காட்சியை விவசாயிகள் மட்டுமின்றி பொதுமக்களும் இலவசமாக பார்வையிட சிறப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு அவர்கள் கூறினர்.

**ரஸ்தாளி கரும்பு அறுவடை...துவக்கம்! விளைச்சல் மிகுதியால் மகிழ்ச்சி**

நாமக்கல்: மல்லசமுத்திரம் அதன் சுற்றுவட்டாரத்தில் காளிப்பட்டி முருகன் கோவில் தைப்பூச தேர்த்திருவிழாவை முன்னிட்டு விளைவிக்கப்படும் "ரஸ்தாளி' ரக கரும்பு அறுவடை துவக்கப்பட்டுள்ளது. விளைச்சல் எதிர்பார்த்த அளவிற்கு உள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். நாமக்கல் மாவட்டம் மல்லசமுத்திரம் அருகே காளிப்பட்டியில் பிரசித்தி பெற்ற முருகன் கோவில் அமைந்துள்ளது. ஆண்டுதோறும் அக்கோவிலில் தைப்பூச திருவிழா நடக்கும். பத்து நாட்கள் நடக்கும் விழாவில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படும். பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த பல லட்சக்கணக்கான மக்கள் கோவிலில் குவிவதால், சேலம், நாமக்கல் மாவட்டத்தில் இருந்து சிறப்பு பஸ்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

விழா நடைபெறும் பத்து நாட்களும் அப்பகுதி முழுவதும் விழாக் கோலம் பூண்டு காணப்படும். இந்தாண்டு காளிப்பட்டி முருகன் கோவில் தைப்பூச திருவிழா 30ம் தேதி நடக்கிறது. அதையொட்டி பல்வேறு ஏற்பாடுகள் கோவில் வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கோவில் வளாகப் பகுதியில் பல்வேறு கடைகள் நிறுவப்பட்டு வருகின்றன.

மேலும், விழாவுக்கு வரும் மக்களை மகிழ்விக்கும் விதத்தில் ராட்சத ராட்டினங்கள் போன்றவையும் அமைக்கப்பட்டுள்ளன. விழாவை முன்னிட்டு கூடும் மாட்டு சந்தை, மரத்தில் தயார் செய்யப்படும் கைவினைப் பொருள் விற்பனை போன்றவை மக்கள் மத்தியில் பிரபலம். தைப்பூச விழா அன்று கோவில் திருத்தேர் இழுத்தல் நிகழ்ச்சி நடைபெறும். அந்நிகழ்ச்சியின்போது கோவில் தேர் மீது உப்பு போட்டால் முகம் மற்றும் உடலில் உள்ள மருக்கள் மறையும் என்பது போன்ற ஐதீகம் மக்கள் மத்தியில் உள்ளது. இந்த விழாவை முன்னிட்டு வெள்ளை நிறத்தாலான "ரஸ்தாளி' கரும்புகள் மல்லசமுத்திரம் அதன் சுற்றுவட்டாரத்தில் விளைவிக்கப்படுகின்றன. அவை விழாவிற்கு முன்னதாக அறுவடை செய்து ஸ்வாமிக்கு படைப்பதுடன், விற்பனையும் செய்யப்படும். மற்ற கரும்புகளைப் போல் இல்லாமல் வித்யாசமாக காணப்படும் ரஸ்தாளி ரகக் கரும்பு சுவை மிகுந்தது. அதன்காரணமாக விழாவிற்கு வரும் பக்தர்களும் அவற்றை ஆர்வமுடன் வாங்கிச் செல்வது வழக்கம்.

தற்போது ரஸ்தாளி ரகக் கரும்புகள் அறுவடைக்கு தயாரான நிலையில் உள்ளது. ஓரிரு தினங்களில் அக்கரும்புகளை அறுவடை செய்யும் விவசாயிகள், அவற்றை தேர் திருவிழா நடக்கும் கோவில் வளாகத்திற்கு விற்பனைக்கு கொண்டு வர உள்ளனர். இது குறித்து மல்லசமுத்திரம் சுற்றுவட்டாரத்தை சேர்ந்த மக்கள் கூறுகையில், ""காளிப்பட்டி கந்தசாமி கோவில் தேர் திருவிழா சேலம், நாமக்கல் மாவட்டத்தில் மிகவும் பிரசித்தி பெற்றது. பத்து நாட்கள் நடக்கும் தேர் விழாவில் நாள்தோறும் கோவிலுக்கு பல ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து செல்வது வழக்கம். இந்த விழாவை முன்னிட்டு மல்லசமுத்திரம், சின்னஉப்புபாளையம், கல்லேரி உள்ளிட்ட சுற்றுவட்டார கிராமப்புறங்களில் ரஸ்தாளி கரும்பு பயிரிடுவதை, பல ஆண்டுகளாக விவசாயிகள் கடைபிடித்து வருகின்றனர். ""விளைநிலங்களில் பல்வேறு விளைபொருட்கள் நடவு செய்தபோதிலும், ரஸ்தாளி கரும்பு பயிரிடுவதற்கென குறிப்பிட்ட இடம் ஒதுக்கப்படுகிறது. அவ்வாறு பயிரிடப்படும் கரும்பு தைப்பூச விழாவிற்கு முன்னதாக அறுவை செய்யப்படும். அக்கரும்பு ஜோடி 50 ரூபாய் வரை விற்பனை செய்யப்படும். இக்கரும்புகளின் சுவை மிகுந்திருக்கும் என்பதால் விலையை மக்கள் நூபாருட்படுத்தாமல் அவற்றை அதிகளவில் வாங்கிச் செல்வர். ""இந்தாண்டு எதிர்பார்த்த அளவிற்கு விளைச்சல் உள்ளதோடு, விலையேற்றம் எதுவும் அடையவில்லை என ரஸ்தாளி ரக கரும்பு விவசாயிகள் தெரிவிக்கின்றனர்," என்றனர்.

**தர்பூசணி குவிப்பு; விற்பனையும் அமோகம்**

நாமக்கல்: கோடை காலம் நெருங்கி வருவதையொட்டி தர்பூசணி விற்பனைக்கு குவிக்கப்பட்டுள்ளது. வெயிலின் தாக்கம் தற்போதே அதிகரித்துள்ளதால் அவற்றை மக்கள் ஆர்வமுடன் வாங்கிச் செல்கின்றனர். ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் துவங்கி ஜூன் இறுதி வரை கோடை வெயிலின் தாக்கம் அதிகம் இருக்கும். வெயிலின் தாக்கத்திலிருந்து தற்காத்துக் கொள்ளும் விதத்தில் பழரசம், இளநீர், செயற்கை குளிர்பானம் போன்றவற்றை மக்கள் அதிகம் நாடுவது வழக்கம்.அதில் முக்கிய இடம் பிடிப்பது தர்பூசணி, வெள்ளரி போன்றவையாகும். குறைந்த விலை மட்டுமின்றி அவற்றில் சுவை மிகுந்திருக்கும்; உடல் சூட்டையும் எளிதில் இவை தணிக்கும் என்பதால் மற்ற குளிர்பானங்களைக் காட்டிலும் தர்பூசணி, வெள்ளரியை மக்கள் அதிகளவில் வாங்குவர்.

தற்போது கோடை காலம் நெருங்கி வருவதால், தர்பூசணி, வெள்ளரி பிஞ்சுகள் விற்பனைக்கு குவிக்கப்பட்டு வருகின்றன. இதுகுறித்து தர்பூசணி மொத்த விற்பனையாளர் ஒருவர் கூறியதாவது: தமிழகத்தில் விழுப்புரம் மாவட்டத்தில் தர்பூசணி அதிகளவு விளைவிக்கப்படுகிறது. அதற்கடுத்து திருவண்ணா மலை, சீர்காழி பகுதியில் தர்ப்பூசணி விளைவிக்கப்படுகிறது. அங்கு உற்பத்தி செய்யப்படும் தர்பூசணி, தமிழகம் மட்டுமின்றி கேரளாவுக்கும் அனுப்பப்படுகிறது. கோடை காலம் நெருங்கி வருவதால் தர்பூசணி தற்போது விற்பனைக்கு வரத் துவங்கியுள்ளது. சென்ற ஆண்டு ஒரு டன் தர்பூசணி 7,000 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. தற்போது 4,000 ரூபாய் முதல் 4,200 ரூபாய் வரை விற்பனையாகிறது. சில்லரை விற்பனைக் கடைகளில் ஒரு கிலோ தர்பூசணி எட்டு ரூபாய் முதல் பத்து ரூபாய் வரை விறப்னை செய்யப்படுகிறது.

குறுகிய கால பயிர் என்பதால் பரவலாக அனைத்து மாவட்டங்களில் தர்பூசணி உற்பத்தி செய்யப்படுகிறது. உற்பத்தி மிகுதி காரணமாக விலை சரிந்துள்ளது. வரும் வாரங்களில் மேலும் விலை குறைய வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர் கூறினார். மல்லசமுத்திரம் திருவேங்கடபுரத்தை சேர்ந்த வெள்ளரி வியாபாரி ஒருவர் கூறுகையில், ""நாமக்கல் மாவட்டத்தில் மல்லசமுத்திரம் சுற்றுவட்டாரம் மற்றும் சங்ககிரி பகுதியில் வெள்ளரி அதிகளவில் விளைவிக்கப்படுகிறது. ஆண்டு முழுவதும் வெள்ளரி விளைவித்து அறுவடை செய்யப்படுகிறது. ""பராமரிப்பு பொறுத்து இதன் விளைச்சல் இருக்கும். மேலும், கோடை காலமான ஃபிப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் வெள்ளரி விற்பனை நன்கு இருக்கும். தற்போது ஒரு கிலோ வெள்ளரி ரூ. 12 வரை விற்பனை செய்யப்படுகிறது. இதன் தேவையை பொறுத்து வரும் மாதங்களில் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது", என்றார்.

**நோய் தாக்குதல் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு**

ராசிபுரம்: "உளுந்து மற்றும் பயறு வகை சாகுபடியில் பூச்சி, நோய்களை கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை கையாள வேண்டும்' என, ராசிபுரம் வேளாண் உதவி இயக்குனர் சுப்ரமணியன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: உளுந்து, பயறு போன்றவற்றின் விலை அதிகரித்து வருவதால், உளுந்து சாகுபடி மேற்கொள்ள இது சரியான தருணம். உளுந்து சாகுபடி செய்ய ஒரு ஏக்கருக்கு எட்டு கிலோ விதை போதுமானது.

டிரைக்கோடெர்மா விரிடி ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் என்ற அளவில் கலந்து, விதை நேர்த்தி செய்து விதைப்பதால் வேர் அழுகல் நோயினை கட்டுப்படுத்தலாம். தழைச்சத்தை கிரகித்து கொடுக்கவும், மண்ணில் உள்ள மணிசத்தை பயிருக்கு கிடைக்கும் வகையில் மாற்றித் தரவும் எட்டு கிலோ விதையுடன் ஒரு பாக்கெட் ரைசோபியம் மற்றும் ஒரு பாக்கெட் பாஸ்போ பாக்டீரியாவை ஆறிய அரிசி கஞ்சியுடன் கலந்து விதை நேர்த்தி செய்து அரை மணி நேரம் நிழலில் உலர்த்தி பின்பு விதைக்க வேண்டும். நடவு வயலுக்கு அடி உரமாக ஏக்கருக்கு 4 பாக்கெட் தலா ரைசோபியம் மற்றும் பாஸ்போ பாக்டீரியா ஆகியவற்றை 25 கிலோ தொழு உரத்துடன் கலந்து இட வேண்டும். மேலும், யூரியா 22 கிலோ, சூப்பர் பாஸ்பேட் 125 கிலோ மற்றும் ஜிப்சம் 44 கிலோ இருத்தல் அவசியம். விதைப்பு செய்தவுடன் பயறு வகை நுண்ணூட்டம் ஏக்கருக்கு இரண்டு கிலோ என்ற அளவில் மணலுடன் கலந்து மேலாக இட வேண்டும். பூக்கும் பருவத்தில் 2 சதவீதம் "டிஏபி' கரைசலை பூ பூக்க துவங்கியவுடன் ஒரு முறையும், 15 நாட்கள் கழித்து மறுமுறையும் தெளிக்க வேண்டும். பூச்சி மற்றும் நோய்களை கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை கையாள வேண்டும். மேலும் இது தொடர்பான விவரங்களுக்கு ராசிபுரம் வட்டார வேளாண் விரிவாக்க மையத்தை அணுகலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**'இயற்கையை நேசித்தால் குறையும் வெப்பம்' : முயன்றால் முடியாதது எதுவுமில்லை**

கோத்தகிரி : "இயற்கையை நேசிக்க கற்றுக் கொண்டால், வெப்பத்தின் பிடியிலிருந்து புவியை பாதுகாக்கலாம்' என, கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது.தமிழ்நாடு அறிவில் இயக்கம் மற்றும் நூலக வாசகர் வட்டம் சார்பில், கோத்தகிரி கிளை நூலகத்தில், சுற்றுச்சூழல் கருத்தரங்கு நடத்தப்பட்டது. நூலகர் ரவி வரவேற்றார்.தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்ட செயலர் ஆசிரியர் ராஜு, சிறப்பு விருந்தினராக பேசியதாவது:உலகை அச்சுறுத்தி வரும் புவி வெப்பம் குறித்து, மக்களிடையே போதிய விழிப்புணர்வு ஏற்படவில்லை. புவி வெப்பத்தின் தாக்கம் குறித்து, இந்தியா உட்பட பல உலக நாடுகளின் தலைவர்கள் கூட கவனம் செலுத்தாமல் இருப்பது துரதிர்ஷ்டவசமானது.

உலக அளவில், கார்பன்-டை-ஆக்சைடை அதிகளவில் வெளியிடும் நாடுகளில், மூன்றாவது இடத்தில் இந்தியா உள்ளது.இந்தியாவில் உள்ள அனல்மின் நிலையங்கள் அனைத்தும் பழமையானவை. அங்கு, நூறு யூனிட்டுகள் நிலக்கரி எரிக்கப்பட்டால், அதிலிருந்து கிடைக்கும் மின்சாரத்தின் அளவு இரண்டு யூனிட்டுகள் மட்டுமே.மீதமுள்ள அனைத்து ஆற்றலும், கார்பன்-டை-ஆக்சைடாக மாறி காற்றில் கலக்கிறது.அனல்மின் நிலையங்களை நவீனப்படுத்தினால், 40 சதவீத ஆற்றலை சேமிப்பதுடன், கார்பன்-டை-ஆக்சைடின் வெளியீட்டையும் கட்டுபடுத்த முடியும்.புவி வெப்பம் குறித்து ஆக்கப்பூர்வமான கொள்கைகளை வெளியிட்டு அவற்றை நடைமுறைபடுத்த முயற்சிக்க வேண்டும். தற்போதுள்ள அலட்சிய நிலை தொடர்ந்து நீடித்தால், வரும் 40 ஆண்டுகளில், புவி வெப்பம் அதிகரிப்பதை தவிர்க்க முடியாது.

இதன் விளைவாக பனிமலைகள் உருகி, அதிகளவு புயல், வறட்சி, பஞ்சம் அதிகரித்து அபாயத்தை உருவாக்கும். இதிலிருந்து தப்பிக்க, இயற்கையை நேசிக்க கற்றுக் கொள்ள வேண்டும்.இவ்வாறு, ஆசிரியர் ராஜு பேசினார்.வாசகர் வட்ட உறுப்பினர்கள் கவுரி வரதராஜன், தவமுதல்வன், ஆசிரியர் போஜன் பேசினர். "இப்படிக்கு பேராண்டி' என்ற தலைப்பில் குறும்படம் காண்பிக்கப்பட்டது.ஒவ்வொரு மாதமும் இதுபோன்ற சுற்றுச்சூழல்

கருத்தரங்கு நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது. வாசகர் வட்ட தலைவர் பசுவராஜ் தலைமை வகித்தார். அகரம் சிவா நன்றி கூறினார்.

**மரபணு மாற்று விதைகள் தடை?: விவசாயிகள் சங்கம் ஆர்ப்பாட்டம்**

தஞ்சாவூர்: தஞ்சாவூர் ரயிலடியில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கங்கள் சார்பில் மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடந்தது. மாவட்ட செயலாளர் சாமிநடராஜன் தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் பன்னீர்செல்வம் முன்னிலை வகித்தார். மாநில தலைவர் பாலகிருஷ்ணன், மாநில பொதுச் செயலாளர் துரைமாணிக்கம், மாவட்ட தலைவர்கள் பாலசுந்தரம், காமராஜ், மாவட்ட பொருளாளர் கோவிந்தசாமி உட்பட பலர் பேசினர்.

இந்திய அரசு புதிய மரபணு மாற்று கத்தரிக்காய் விதைகளை அறிமுகம் செய்து அனுமதி வழங்கியுள்ளது. இச்செயல் இந்திய விவசாயத்தை பாதுகாக்க உதவாது. கடந்த காலங்களில் ஆந்திரா, மகராஷ்டிரா மாநிலத்தில் மரபணு மாற்று பருத்தி விதைகளை அறிமுகம் செய்தனர். அதனால், முழுவதும் பாதிக்கப்பட்டவர்கள் விவசாயிகள்தான். மரபணு மாற்று செய்யப்பட்ட உணவு பண்டங்களை ஐரோப்பிய நாடுகளில் தடை விதித்துள்ளனர். இந்த சூழலில் பன்னாட்டு கம்பெனிகள் கையில் ஒட்டு மொத்த விதை சந்தைகளை மத்திய அரசு தாரை வார்க்கிறது. மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகளை பயன்படுத்தினால் மண்ணின் வளம் குறையும். பாரம்பரியமான விதைகள் முற்றிலும் அழிந்துவிடும். சுற்றுச்சூழல் பாதிக்கும். மரபணு மாற்றம் செய்யப்பட்ட உணவு பொருட்களை உண்பதால் பல்வேறு புதிய, புதிய நோய்கள் ஏற்படும், என விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

எனவே, மத்திய அரசு மரபணு மாற்று விதைகளை உடன் தடை செய்ய வேண்டும். ஒரிசா, கேரளா போன்ற மாநிலங்களில் மரபணு மாற்று விதைகளை முழுமையாக தடை செய்துள்ளனர். எனவே, தமிழக அரசும் உடன் தடை செய்ய வேண்டும், என வலியுறுத்தினர்.

**உளுந்து விலை உயர்வால் அப்பளம் விலை உயர்ந்தது**

ஆண்டிபட்டி : உளுந்து விலை தொடர்ந்து உயர்ந்து வருவதால் அப்பளம் தயாரிப்பு தொழிலில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அப்பளம் விலையை உயர்த்தி விற்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஆண்டிபட்டி பகுதியில் சுய உதவிக்குழுவினர், தனிநபர்கள் பலரும் அப்பளம் தயாரிப்பு தொழிலில் ஈடுபட்டுவருகின்றனர். குடிசைத் தொழிலாளாக இதை செய்துவரும் சுய உதவிக்குழுவினர் இதில் கணிசமாக வருவாய் ஈட்டிவருகின்றனர். அப்பளம் தயாரிக்கும் தொழில், அதிக முதலீடுகள் இல்லாத குடிசைத்தொழிலாகவே இருந்து வருவதால் பலரும் ஆர்வமுடன் இத்தொழிலில் ஈடுபட்டுவருகின்றனர். இந்நிலையில் அப்பளம் செய்ய தேவையான மூலப்பொருளான உளுந்து விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. இதனால் கிலோ 140 ரூபாய்க்கு விற்ற அப்பளம் தற்போது 160 ரூபாயாக விலை உயர்ந்துள்ளது. விலை உயர்வு குறித்து அப்பளம் தயாரிப்பு தொழில் செய்பவர்கள் கூறுகையில்,"கடந்த ஆண்டு உளுந்து கிலோ 60 ரூபாய் வரை விற்றது. தற்போது கிலோ 80 முதல் 90 வரை அதிகரித்துள்ளது. இதனால் அப்பளம் விலையை உயர்த்த வேண்டிய கட்டாயம் உள்ளது' என்றனர்.

**உலகச் சந்தையில் பனை பொருட்களுக்கு வாய்ப்பு: முதன்மை ஆய்வாளர் பெருமிதம்**

வல்லநாடு : பனைபொருட்களுக்கு உலக சந்தையில் பிரகாசமான வாய்ப்புகள் உள்ளதாக பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரியின் முதன்மை ஆய்வாளர் பேராசிரியர் பொன்னுச்சாமி பேசினார்.
அந்தோணியார்புரம் கிராமத்தில் பனைத் தொழில் பயிற்சி முகாம் கிள்ளிகுளம் வேளா ண்மை கல்லூரியின் முதல்வர் ராஜராஜன் மேற்பார்வையில் நடந்தது. முகாமிற்கு தூத்துக்குடி மாவட்ட பல்நோக்கு சேவா சங்கத்தின் இயக்குநர் விக்டர் லோபோ அடிகளார் தலைமை வகித்தார். கிள்ளிகுளம் வேளாண்மை கல்லூரியின் பேராசிரியர் நயினார்

வரவேற்றார். முகாமில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக பனை ஆராய்ச்சி திட்டங்களின் முதன்மை ஆய்வாளர் பேராசிரியர் பொன்னுச்சாமி பேசுகையில் மத்திய அரசின் உயர் தொழில்நுட்பத் துறையின் மூலம் 48.32 லட்சம் ரூபாய் மதிப்பில் விரைவில் அதிக பதனீர் தரும் குட்டை பனை வகைகளை கண்டறிதல் திசு வளர்ப்பு மற்றும் தண்டுப் பகுதிகளை கொண்டு நாற்று உருவாக்கும் தொழில் நுட்பங்களை கண்டறிதல் பனை தொழிலாளர்களுக்கு பனை பொருட்கள் தயாரிப்பில் பயிற்சி அளித்தல் ஆகிய ஆராய்ச்சி திட்டங்கள் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழகத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்று கூறினார். மேலும் தமிழ்நாட்டில் மாநில மரமாக போற்றப்படும் பனை மரங்கள் மாநிலம் முழுவதும் 10 லட்சம் இருந்தன. தற்போது 30 சதவீத மரங்கள் அழிக்கப்பட்டுவிட்டன.

ஆகையால் பனைமரங்கள் விறகு உள்ளிட்ட தேவைகளுக்காக வெட்டப்படுவது தவிர்க்க வே ண்டும் எனவும் குறிப்பிட்டார். பனையில் பதநீரிலிருந்து பனைவெல்லம், கற்கண்டு, தேன், பொங்கல், பாயாசம், பனங்கிழங்கு மாவிலிருந்து லட்டு, கேசரி பக்கோடா, உப்புமா, பனங்கொட்டையின் பால் போன்ற சீம்பிலிருந்து பேடா, அல்வா, பனம் பழத்திலிருந்து செறிவூட்டப்பட்ட பழக்கூழ், தயார்நிலை பானம் ஆகியவையும், நுங்கிலிருந்து உலர்பழம், குளிர்பானம் ஆகிய மதிப்பு கூட்டபட்ட உணவுப் பொருட்கள் இயற்கை சார்ந்த பூச்சிக்கொல்லி நச்சுகளற்ற பாதுகாப்பான உணவுப் பொருட்களாகும். பனையின் ஓலை, மட்டை, தண்டு, வேர் ஆகியவற்றிலிருந்து தயாரிக்கப்படும் கைவினை பொருட்களுக்கு உலகசந்தையில் பெரும் வரவேற்பு உள்ளதாக தெரிவித்தார். முகாமில் தூத்துக்குடி மாவட்ட பனை பொருள் தொழிலாளர் சங்க தலைவர் ராயப்பன், தோட்டக்கலை துணை இயக்குநர் ஜோசப் கருணாநிதி உட்பட பலர் கலந்து கொண்டு பேசினர். உதவி பேராசிரியர் மணிவண்ணன் நன்றி கூறினார்.

**தோட்டக்கலை அதிகாரி ஆய்வு**

தூத்துக்குடி,: புதுக்கோட்டை வட்டாரத்தில் தோட்டக்கலை கூடுதல் இயக்குநர் ஆய்வு செய்தார்.புதுக்கோட்டை வட்டாரத்தில் நடப்பு ஆண்டில் தோட்டக்கலைத்துறையின் கீழ் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தில் ரூ.1.67 லட்சம் மதிப்பில் பழமரக்கன்றுகள் வீரிய ஒட்டு காய்கறி விதைகள் முதலியன வழங்கப்பட்டுள்ளது. துல்லிய பண்ணைய திட்டத்தில் அத்திமரப்பட்டி பேருரணி அல்லிகுளம் பகுதிகளில் 20 ஹெக்டேர் பரப்பில் வாழை காய்கறி ரோஜா முதலிய பயிர்களில் துல்லிய பண்ணையம் அமைக்க விவசாயிகள் தேர்வு செய்து சொட்டுநீர்பாசனம் அமைக்கப்பட்டு வருகின்றது. நுண்ணீர் பாசன திட்டத்தின் கீழ் 50 ஹெக்டேர் இலக்கு ஒதுக்கப்பட்டு இதுவரையிலும் 25 ஹெக்டேர் பரப்பில் சொட்டுநீர்பாசனம் அமைக்கப்பட்டுள்ளது. இப்பணிகளை தோட்டக்கலைத்துறை கூடுதல் இயக்குநர் பெரியசாமி ஆய்வு செய்தார். சேர்வைக்காரன்மடம் சக்கம்மாள்புரம் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் உதிரவேல், ராஜசேகர் ஆகியோரது திசு வாழை நடப்பட்ட வயல்களில் சொட்டுநீர் பாசனம் அமைக்கப்பட்டுள்ளதை ஆய்வு செய்தார். துல்லிய பண்ணைய விவசாயி சரவணனின் திசு வாழை பயிரும் ஆய்வு செய்யப்பட்டது. விவசாயிகள் சொட்டுநீர் பாசனம் அமைத்ததால் கூலியாட்கள் செலவும், தண்ணீர் தேவையும் குறைந்துள்ளதாகவும், களையும் பெரிதும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். துல்லிய பண்ணைய திட்டத்தின் மூலம் கரையும் உரங்களை சொட்டுநீர் பாசனத்தின் மூலம் செலுத்தியதால் வாழைத்தார்களின் எடை அதிகரித்து கூடுதல் விலை கிடைத்ததாகவும் தெரிவித்தார். வாழை விவசாயிகள் தாங்களே நேரிடையாக விற்பனை செய்து அதிக இலாபம் பெற முயற்சி எடுக்கும்படி அறிவுரை வழங்கினார். ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தில் கட்டாலங்குளம் கிராமத்தில் ஜெயராயனுக்கு வழங்கப்பட்டுள்ள பழமரக்கன்றுகளும் ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வின்போது தூத்துக்குடி தோட்டக்கலை துணை இயக்குநர் ஜோசப் கருணாநிதி மற்றும் புதுக்கோட்டை வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் கரோலின் ஆகியோர் உடனிருந்தனர்.

**கோழிகளுக்கு தடுப்பூசி முகாம்**

திருவண்ணாமலை : திருவண்ணாமலை மாவட்டத்தில் வரும் பிப்.2ம் தேதி முதல் பிப்.15ம் தேதி வரை கோழிகளுக்கான தடுப்பூசிப்பணி முகாம் நடக்க இருக்கிறது.
இது குறித்து கலெக்டர் ராஜேந்திரன் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: தி.மலை மாவட்டத்தில் கோழிகளுக்காக ஒவ்வொரு ஆண்டும் கால்நடை பராமரிப்புத்துறை மூலம் பிப்ரவரி மாதங்களில் 2 வார முகாம் நடத்தப்படுகிறது. இதில், நகரம், கிராமம் மற்றும் சிறியகிராமங்களில் உள்ள அனைத்து இடங்களிலுள்ள கோழிகளுக்கு தடுப்பூசிப்பணி மேற்கொள்ளப்படுகிறது. இந்த ஆண்டு, ஒரு லட்சத்து 65 ஆயிரம் கோழிகளுக்கு இப்பணியை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இப்பணி வரும் பிப்.2ம் தேதி முதல்15ம் தேதி முடிய மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறை மூலம் மேற்கொள்ளப்படவிருக்கிறது. கோழிகள் வளர்க்கும் விவசாயிகள் அருகிலுள்ள கால்நடை மருத்தகம், கால்நடை கிளை நிலையங்களுக்கு சென்று அங்கு நடைபெறும் முகாம்களில் கோழிகளுக்கு தடுப்பூசி போட்டு பயன்அடையலாம். இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**உளுந்து பயிர் அமோக விளைச்சல்: சாதனை படைத்தது வேளாண் துறை : விவசாயிகள் மகிழ்ச்சி!**

விழுப்புரம் : விழுப்புரம் மாவட்டத்தில் உளுந்து விளைச்சல் அமோகமாக உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு இந்தாண்டு ஒரு லட்சம் ஏக்கர் பரப்பளவில் உளுந்து சாகுபடி செய்துள் ளது வேளாண் துறையினரின் சாதனையாக அமைந் துள்ளது.கடந்த சில ஆண்டுகளாக உளுந்து, துவரை மற்றும் கடலை பருப்புகள் உள்ளிட்டவற்றின் விலை கடுமையாக உயர்ந்துள் ளது. இதனால் சாமான்ய மக்கள் பயறு வகைகளை தாராளமாக வாங்கி பயன்படுத்த முடியாமல் திணறி வருகின்றனர்.

உள் நாட்டில் பயறு உற்பத்தி மிகவும் குறைந்து போனதால் வெளி நாடுகளிலிருந்து பருப்பு வகைகள் தமிழகத்திற்கு இறக்குமதி செய்யப்படுகிறது.விவசாயம் நிறைந்த தமிழகத்தில் ரியல் எஸ்டேட் பெருக் கம் மற்றும் தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தால் விவசாய நிலம் குறைந்து, வேலைக்கு ஆட்கள் பற்றாக் குறை ஏற்பட் டுள்ளதால் உணவு உற்பத்தி குறைந்து போனது.இந்தாண்டு தென்மேற்கு பருவமழை சரியாக பெய்யாததால் மானாவாரி நிலங்கள் பயிர் செய்ய முடியாமல் போனது. அதனை தொடர்ந்து காலதாமதமாக துவங் கிய வடகிழக்கு பருவமழை பல நாட்கள் நீடித்ததால் அதனை பயன்படுத்தி உளுந்து சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் செலுத்தினர். மேலும் உளுந்து பயிர் 65 முதல் 70 நாட்களில் சாகுபடி செய்யக் கூடிய குறுகிய கால பயிர் என்பதாலும் விவசாயிகள் ஆர்வமுடன் ஈடுபட்டு வருகின்றனர்.

விதைக்கும் பருவத்தில் குறைந்தளவு தண்ணீர் இருந் தால் போதுமானது. பூக்கும் பருவத்தில் பனி ஈரத்திலேயே நன்கு விளைந்து மகசூல் தரக் கூடியது.இதனால் அன்றாட அத்தியாவசிய தேவையான பயறு வகை உற்பத்தியை பெருக்க மாவட்ட வேளாண் துறையினர் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள் ளனர். அதன்படி தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம், தேசிய உணவு பாதுகாப்பு திட் டம் (பயறு) மற்றும் நீர்வள நிலவள திட்டத்தின் மூலம் பயறு வகை உற்பத்தியை பெருக்கி வருகின்றனர். இதிலும் குறிப்பாக உளுந்து சாகுபடியில் அதிக ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.

உயர் ரக விளைச்சல்: அரசின் பயறு வகை பெருக்கு திட்டங்களின் மூலம் உயர் ரக விளைச்சல் தரக் கூடிய வம்பன் 2, 3, 4 (வி.பி.என்) வகை உளுந்து விதைகள் மற்றும் விதைப்பு செய்து 25வது நாள், 35வது நாள் மற்றும் பூக்கும் பருவத்தில் செடிகளுக்கு நேரடியாக தெளிக்கும் வகையில் டி.ஏ.பி., உரங்களும் வேளாண் துறை மூலம் விவசாயிகளுக்கு மான்யமாக வழங்கப்படுகிறது. உளுந்து சாகுபடிக்கான தொழில் நுட்ப முறைகள், பயிர் பாதுகாப்பு குறித்தும் வட்டார வேளாண் உதவி இயக்குனர்கள் விவசாயிகளுக்கு சிறப்பு பயிற்சி அளிக் கின்றனர்.

இந்தாண்டு மாவட் டம் முழுவதும் ஒரு லட்சத்து 10 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் பயறு வகைகளான உளுந்து, துவரை உள் ளிட்டவை சாகுபடி செய்யப்பட் டுள்ளன.

இதில் உளுந்து மட்டும் ஒரு லட்சத்து 3 ஆயிரம் ஏக்கர் பரப்பில் சாகுபடி செய் யப்பட் டுள்ளன. கடந்தாண்டை விட 12 ஆயிரத்து 500 ஏக்கர் கூடுதல் பரப்பளவில் தற்போது உளுந்து சாகுபடி செய்யப்பட்டுள்ளன. சாதா முறையில் பயிர் செய்தால் ஏக்கருக்கு 3 முதல் 4 மூட்டைகள் உளுந்து கிடைக்கும். ஆனால் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி சாகுபடி செய்வதால் ஏக்கருக்கு 5 முதல் 6 மூட்டைகள் வரை உளுந்து மகசூல் கிடைக்கிறது.உளுந்து விளைச்சல் அமோகமாக இருப்பது மட்டுமின்றி விலையும் உயர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந் துள்ளனர்.

**வேளாண்மை துறை சார்பில் விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்**

சங்கராபுரம் : சங்கராபுரம் அடுத்த எஸ்.குளத்தூரில் வேளாண்மைத் துறை சார்பில் விவசாயிகளுக்கு ஒரு நாள் பயிற்சி முகாம் நடந்தது. விதை கிராம திட்டத்தின் கீழ் நடந்த பயிற்சி முகாமிற்கு ஊராட்சி தலைவர் சண்முகம் தலைமை தாங்கினார். முன்னாள் தலைவர்கள் தங்கவேல், ராஜேந்திரன் முன்னிலை வகித்தனர்.முகாமில் சான்று விதை உற்பத்தி, தரமுள்ள விதையை சாகுபடி செய்து அதிக மகசூல் பெறு வது பற்றி வேளாண்மை அலுவலர் ஆனந்தன் பேசினார். உதவி வேளாண்மை அலுவலர்கள் தங்கராசு, நாசர், ஆறுமுகம் கலந்து கொண்டனர்.

புகைபிடிப்பு இல்லாத மாவட்டமாக மாற்ற நடவடிக்கை: கலெக்டர் பழனிசாமி பேச்சு
விழுப்புரம் : விழுப்புரம் மாவட்டம் புகைபிடிப்பு இல்லாத மாவட்டமாக அறிவிக்கப்பட உள்ளதாக கலெக்டர் பழனிசாமி பேசினார்.மாவட்டத்தில் புகையிலை தடுப்புச் சட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியுள்ளதையொட்டி ஆய்வுக் கருத்தரங்கம் கலெக்டர் அலுவலகத்தில் நடந் தது. கலெக்டர் பழனிசாமி தலைமை தாங்கினார். சுகாதாரத்துறை துணை இயக்குனர்கள் கிருஷ்ணராஜ், கீதா, அரசு வக்கீல் சுப்ரமணியன் முன்னிலை வகித்தார்.இந்தியாவிலேயே விழுப்புரம் மாவட்டம் புகையிலை ஒழிப்புச் சட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியுள்ளதையொட்டி புகையிலை ஒழிப்பு மாவட்டமாக அறிவிக்கப்பட உள்ளது. இதற்கான நடவடிக்கைகள் குறித்து கூட்டத் தில் ஆய்வு செய்யப் பட்டது.

கூட்டத்தில் கலெக்டர் பழனிசாமி பேசியதாவது:விழுப்புரம் மாவட்டத்தில் புகையிலை ஒழிப்புச் சட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியுள் ளோம். மத்திய அரசு தனியார் தொண்டு நிறுவனம் மூலம் புகையிலை தடுப்பு நடவடிக்கைகளை ஆய்வு செய்துள்ளனர். இதில் மாவட்டத்தில் 37 சதவீதம் புகைப்பிடிப்பவர்கள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. புகையிலை ஒழிப்பு நடவடிக்கையை 81 சதவீதத்தினர் வரவேற்றுள்ளனர். புகைப்பிடிப்பதால் அவரது உடல் வீணாவதுடன், சமுதாய சீர்கேடும் ஏற்படுகிறது. புகையிலை ஒழிப்பில் இந்திய அளவில் விழுப் புரம் மாவட்டத் தில் தான் அதிகளவிலான அபராதம் விதிக்கப்பட் டுள்ளது. ஒலக்கூர் ஒன்றியத்தில் 750 பேருக்கு அபராதம் விதிக்கப் பட்டுள்ளது. இதற்காக வட்டார மருத்துவ அலுவலர் சாந்திக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது.

நகர்புறங்களைவிட கிராமப்புறங்களில் புகைப்பிடிக்கும் பழக் கம் குறைந்துள்ளது. விழுப்புரம் சுகாதார மாவட்டத்தில் சிறப் பாக பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. கள்ளக்குறிச்சி சுகாதார மாவட்டத்தில் இதைப் போல் பணிகளை மேற்கொள்ள வேண் டும். விரைவில் புகையிலை இல் லாத மாவட்டமாக அறிவிக்கப்பட உள்ளது. இதில் சில இடர்பாடுகள் உள்ளதால் சட்ட வல்லுநர்கள் மூலம் சரி செய்து அறிவிக்கப்படும் என்றார்.சுகாதாரத்துறையினர், தொண்டு நிறுவனத்தினர் மற்றும் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

**துவரம் பருப்பு சிறப்பு விற்பனை**

கள்ளக்குறிச்சி : சிறப்பு பொது வினியோக திட்டத்தின்கீழ் கள்ளக்குறிச்சியில் துவரம் பருப்பு விற்பனை துவங்கியது.கள்ளக்குறிச்சி நுகர் பொருள் வாணிப கழக கிடங்கில் நேற்று மதியம் துவங்கிய சிறப்பு விற்பனையை மண்டல மேலா ளர் குணசேகரன் துவக்கி வைத்தார். ரேஷன் கார்டு உள்ள அனைவரும் மாதம் ஒரு கிலோ துவரம் பருப்பு வாங்கலாம் என்று மண்டல மேலாளர் தெரிவித் தார்.நிகழ்ச்சியில் உதவி மேலாளர் கோபால், கள்ளக்குறிச்சி வருவாய் ஆய்வாளர் தசரதன், கிடங்கு தர ஆய்வாளர் சோலைமுத்து கலந்து கொண்டனர்.

**மரபணு மாற்றப்பட்ட கத்தரிக்காயைதடை செய்ய கிராம சபையில் தீர்மானம்**

பல்லடம் : "மரபணு மாற்றப்பட்ட கத்தரிக்காயை தடை செய்ய வேண்டும்' என, வாவிபாளையம் மற்றும் வடுகபாளையம் புதூர் ஊராட்சிகளில் நடந்த கிராம சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.கே.அய்யம்பாளையம் ஊராட்சியில் கிராமசபை கூட்டம் நடந்தது; ஊராட்சி தலைவி கமலம் தலைமை வகித்தார். துணை தலைவர் வேலுசாமி முன்னிலை வகித்தார். ஒன்றிய தலைவர் பாலசுப்பிரமணியம், மாவட்ட கவுன்சிலர் நடராஜன் வரவேற்றனர். ஊராட்சியில் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சி பணிகள், மேற்கொள்ள வேண்டிய வளர்ச்சி பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டது.கிராம சபை கூட்டத்தை ஆய்வு செய்து, கலெக்டர் சமயமூர்த்தி பேசியதாவது:ஆண்டுக்கு நான்கு முறை கிராம சபை கூட்டம் கூட்டப்படுகிறது. 18 வயது முடிந்த ஆண், பெண் வாக்காளர்கள் பங்கேற்கலாம். ஊராட்சியில் என்னென்ன பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன;

மேற்கொள்ள வேண்டிய பணிகள் என்ன என்பதை பொதுமக்கள் கூடி முடிவெடுக்கலாம். கிராம ஊராட்சி என்பது "குட்டி அரசாங்கம்' என்று கூட சொல்லலாம்.வரி விதிப்பு, நிதி ஆதாரத்தை பெருக்கிக் கொள்ளும் உரிமை போன்றவை ஊராட்சிக்கு உண்டு. கிராமத்தை தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். நூலகத்தை மாணவர்கள் நன்றாக பயன்படுத்தி, போட்டி தேர்வுகளில் பங்கேற்று திறமைகளை வளர்த்துக் கொள்ள� வண்டும்.சிறந்த விளையாட்டு வீரர்கள், கிராமங்களில் உருவாக்கப்பட வேண்டும். பழுதடைந்த சாலைகளை நமக்கு நாமே திட்டத்தில் சீரமைக்க முடியும். இதற்கு ஏற்படும் செலவில் மூன்றில் ஒரு பங்கு தொகையை பொது மக்கள் வழங்க வேண்டும்.இவ்வாறு, கலெக்டர் பேசினார்.தாசில்தார் மோகனம், தலைமையிடத்து துணை தாசில்தார் கதிரேசன், பி.டி.ஓ., சையதுசாஹூன் உட்பட பலர் பங்கேற்றனர்.

வாவிபாளையம் ஊராட்சியில் தலைவர் பார்த்தசாரதி தலைமையில் கிராம சபை கூட்டம் நடந்தது. துணை தலைவர் சுமதி, பற்றாளர் சுப்ரமணியம் மற்றும் கவுன்சிலர்கள் பங்கேற்றனர்.இக்கூட்டத்தில், "மரபணு மாற்றப்பட்ட கத்தரிக்காய் மற்றும் இதர வேளாண் உற்பத்தி விதைகளை இந்தியாவில் அனுமதிக்கக்கூடாது' என்பன உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.வடுகபாளையம்புதூரில் ஊராட்சி தலைவி தனமணி தலைமையில் நடந்த கிராமசபை கூட்டத்தில், "மரபணு மாற்றப்பட்ட கத்தரிக்காயை தடை செய்யவேண்டும்; முல்லை பெரியாறின் குறுக்கே கேரள அரசு புதிதாக அணை கட்டுவதை தவிர்க்க வேண்டும்' என்பன உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**பட்டுக்கூட்டில் கிடைத்தது லாபம்: கஷ்டப்பட்ட விவசாயிகள் மகிழ்ச்சி**

மல்பெரி பயிரில் ஏக்கருக்கு 80 ஆயிரம் ரூபாய் வருமானம் கிடைத்ததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.ஆண்டுதோறும் குறைந்து வரும் மழை; கட்டுப்படியாகாத விளைபொருள் விலை; அதிகரித்து வரும் உரம் மற்றும் பூச்சி மருந்து விலை; வேலைக்கு ஆட்கள் கிடைக்காதது; நிலத்தடி நீர் மட்டம் குறைவு ஆகியவற்றால் விவசாய பரப்பு குறைந்து வருகிறது. பல நூறு ஏக்கர் விவசாய நிலம் "லே-அவுட்'களாக அமைக்கப்பட்டு "சைட்'டுகளாக விற்கப்படுகிறது. இந்நிலையில், மல்பெரி பயிர் மற்றும் பட்டுப்புழு வளர்ப்பு, விவசாயிகளுக்கு லாபகரமாக உருவாகியுள்ளது. பொள்ளாச்சி, அன்னூர் வட்டாரத்தில் அதிக அளவில் மல்பெரி

பயிரிடப்படுகிறது; அடுத்தபடியாக, சுல்தான்பேட்டையில் பயிரிடப்படுகிறது.துவக்கத்தில் குறைவாக பயிரிடப்பட்ட மல்பெரி, ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து, தற்போது அன்னூர் வட்டாரத்தில் மட்டும் 250 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ளது.

ஒரு ஏக்கருக்கு ஆண்டுக்கு செலவு போக, 80 ஆயிரம் ரூபாய் வருமானம் கிடைப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.அன்னூர் வட்டாரத்தில் அல்லப்பாளையம், பொன்னே கவுண்டன்புதூர், பெத்திகுட்டை, பிள்ளையப்பம்பாளையம், குமாரபாளையம் ஆகிய இடங்களில் மல்பெரி பயிரிடப்பட்டு, பட்டுப்புழு வளர்க்கப்படுகிறது.

**மல்பெரி விவசாயிகள் கூறியதாவது:**வீ1, எம்.ஆர்., 2 ஆகிய இரண்டு வீரிய ரக மல்பெரி அதிகம் பயிரிடப்படுகிறது. நாற்று முறையில் நடப்படும் மல்பெரியில் முதல் முறை 90 நாட்களுக்கு பின் இலைகளை பறிக்கலாம். அதன்பின், ஐம்பது நாட்களுக்கு ஒரு முறை இலைகளை பறிக்கலாம். ஒரு ஏக்கருக்கு 5,400 செடி நடலாம். மல்பெரி பயிரிட்டதும் பட்டுப்புழு வளர்ப்பு கூடம் தயார் செய்து கொள்ள வேண்டும். மல்பெரி பயிரிடும் போது, மூன்று பிரிவுகளாக பிரித்து பயிரிட வேண்டும்.இதன் மூலம், 25 நாட்களுக்கு ஒரு முறை இலைகளை பறித்து பட்டுப்புழுக்களுக்கு அளிக்க முடியும். பட்டுப்புழுக்கள் மல்பெரி இலைகளை உட்கொண்டு மூன்று வாரங்களில் பட்டுக்கூடு கட்டத்துவங்கி விடுகின்றன. அதிலிருந்து, நான்கு நாட்களுக்கு பின் பட்டுக்கூடுகளை எடுத்து சுத்தப்படுத்தி கோவையில் உள்ள மாவட்ட பட்டுப்புழு வளர்ப்பு அங்காடியில் நடக்கும் ஏலத்தில் விற்கிறோம். எவ்வளவு பட்டுக்கூடு எடுத்துச்சென்றாலும் ஏலத்தில் விற்றுப்போகிறது.ஒரு ஏக்கரில் மல்பெரி பயிரிட்டு, அந்த இலைகளை பட்டுப்புழுக்களுக்கு அளித்து, பட்டுக்கூடுகள் எடுத்து விற்பனை செய்வதன் மூலமாக, அனைத்து செலவுகளும் போக ஆண்டுக்கு 80 ஆயிரம் ரூபாய் வருமானம் கிடைக்கிறது. இதனால், மேலும் பல விவசாயிகள் மல்பெரி பயிரிட ஆர்வம் காட்டுகின்றனர்.இவ்வாறு, விவசாயிகள் தெரிவித்தனர்.

**அல்லப்பாளையம் விவசாயி காளியப்பன் கூறியதாவது:**வாழை மற்றும் மஞ்சளுக்கு தேவைப்படும் தண்ணீரில் பாதியளவு தண்ணீர் இருந்தாலே மல்பெரிக்கு போதுமானது. வாழை, கரும்பு, மஞ்சள் உள்ளிட்ட பயிர்களை நடவு செய்த ஓராண்டு கழித்தே வருமானம் பார்க்க முடியும். ஆனால், மல்பெரியில் பட்டுக்கூடு விற்பனை மூலம் ஒவ்வொரு மாதமும் வருமானம் கிடைக்கிறது.தற்போது, பட்டுக்கூடு கிலோ 185 ரூபாய்க்கு விற்பனையாகிறது. விலை மேலும் அதிகரித்தால் விவசாயிகளுக்கு அதிக லாபம் கிடைக்கும். நாளுக்கு நாள் பட்டுக்கூடுகளுக்கு தேவை அதிகரித்து வருகிறது. தண்ணீர் குறைவாக உள்ள விவசாயிகள், இந்த பயிர் மூலம் கூடுதல் வருமானம் பெறலாம்.பட்டுவளர்ச்சித் துறையினர், மல்பெரி பயிரிட ஏக்கருக்கு 4,125 ரூபாய் மானியம் தருகின்றனர். பட்டுப்புழு கூடம் அமைக்க 50 ஆயிரம் ரூபாயும், சொட்டு நீர் பாசனம் அமைக்க ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாயும் மானியம் தருகின்றனர். மல்பெரியை ஒரு முறை நடவு செய்தால் 20 ஆண்டுக்கு பலன் தரும்.களர் மண் தவிர மற்ற அனைத்து மண்ணிலும் நன்கு வளரும். மண் புழு உரம் உள்ளிட்ட இயற்கை உரம் பயன்படுத்தினால் விளைச்சல் மேலும் அதிகரிக்கும். சொட்டு நீர் பாசனம் உள்ளதால், களை வருவதில்லை. இதனால் களை எடுக்க, தண்ணீர் பாய்ச்ச ஆட்கள் தேவையில்லை.இவ்வாறு,  காளியப்பன் தெரிவித்தார்.

**- நமது நிருபர் -**

**ஒரு முட்டை விலை 3 ரூபாய்; பருப்பு விற்பனை மந்தம்:தங்கம் விற்பனை ஜோர்**

திருப்பூர் : திருப்பூர் மார்க்கெட்டில் ஒரு முட்டை மூன்று ரூபாய்க்கு விற்கப் படுகிறது. மேலும், தை மாத முகூர்த்த சீசன் துவங்கியுள்ளதால், தங்க நகைகள் விற்பனையும் அதி கரித்துள்ளது.

**மார்க்கெட் நிலவரம் வருமாறு:**

திருப்பூர் காய்கறி மார்க்கெட்டுக்கு சின்ன வெங்காயம் வரத்து அதிகரித் துள்ளதால், விலை குறைந்துள்ளது; இதேநேரத்தில் கத்தரிக்காய் விலை அதிகரித்துள்ளது. கடந்த வாரம் சின்ன வெங்காயம் கிலோ ரூ.16 வரை விற்கப்பட்டது. இந்த வாரம் வரத்து அதிகரித்ததால், 12 ரூபாயாக குறைந்துள்ளது. இதேபோல், கடந்த வாரம் 20 ரூபாயாக இருந்த ஒரு கிலோ கத்தரிக்காய், இந்த வாரம் 40 ரூபாயாக உயர்ந்துள்ளது.
தக்காளி 12; அவரை 28; வெங்காயம் பெரியது 24; உருளை 16; பீன்ஸ் 20; கேரட் 24; முள்ளங்கி 12; பீட்ரூட் 16; பாகை 18; மிளகாய் 18; மேரக்காய் 10; புடலை 10;  பீர்க்கங் காய் 28; பூசணி 10; அரசாணி 6; முட்டைகோஸ் 10; காலிபிளவர் 10; இஞ்சி 40 ரூபாய் என விற்பனை யாகின்றன. கீரை கட்டு ஒன்று ஒரு ரூபாய்க்கும், கொத்தமல்லி கட்டு 4: கருவேப்பிலை கிலோ 25 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது.பருப்பு விற்பனை மந்தம்: புது பருப்பு வரத்து துவங்கியுள்ளதால், விலை குறையத் துவங்கியுள்ளது; தற்போதைக்கு பருப்பு விலை அதி கரிக்க வாய்ப்பு இல்லை என்கின் றனர் வியாபாரிகள்.

**தினசரி மார்க்கெட் சங்கத் தலை வர் பாலசுப்ரமணியம் கூறியதாவது:**தாமதமாக அறுவடை செய்யப் பட்டாலும், புதிய பருப்புகள் சந்தைக்கு அதிகமாக வருகின்றன. இதனால், பருப்பு விலை குறையத் துவங்கியுள்ளது. இரண்டு மாதத் திற்கு பருப்பு விலையில் நிலையற்ற தன்மை காணப்படும். தற் போதைக்கு விலை அதிகரிக்க வாய்ப்பு இல்லை.விலை இறங்கும் என்ற எண்ணத் தில், தங்களது தேவைக்கு ஏற்ப பருப்புகளை வாங்கிச் செல்கின் றனர். விலை குறைந்த அளவுக்கு விற் பனை அதிகரிக்கவில்லை. ஆந்திரா, ஊட்டி போன்ற பகுதிகளில் இருந்து பருப்பு வரத்து அதிகரித்துள்ளது. துவரம் பருப்பு கிலோ 70 ரூபாய்; பச்சப்பயிறு 68; பாசிப்பருப்பு 78; வெள்ளை உளுந்து 76; கருப்பு உளுந்து 66; தட்டப்பயிறு 40; கொள்ளு 30; சுண்டல் கடலை 38; அஸ்கா 41 முதல் 42 வரை விற்கப்படுகிறது, என்றார்.

**முல்லை வரத்தில்லை: பூக்களின் விலை நிலவரம் குறித்து பூ மார்க் கெட் சங்க செயலாளர் சக்திவேல் கூறுகையில்**, ""மல்லிகை கிலோ 280; ஜாதி முல்லை 240; கனகாம்பரம் 240; அரளி 80; பட்டுப்பூ 40; செவந்தி 50; சம்பங்கி 80; ரோஸ் கிலோ 80; தாமரை பூவொன்று 5; செம்பகப்பூ ஒன்று இரண்டு ரூபாய் என விற் கிறது. முல்லை பூ சீசன் குறைந்து, வரத்து குறைந்துள்ளது, என்றார்.

**முட்டை விலையில் மாற்றம்: முட்டை வியாபாரி லோகநாதன் கூறுகையில், **""முட்டை கொள்முதல் விலையில் 15 காசு குறைந்துள்ளது; மொத்த விற்பனையில் மட்டும் விலை குறைந்துள்ளது; சில்லரை விற்பனையில் மாற்றமில்லை. ஒரு முட்டை 2.45 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. 2.50க்கு மொத்த விற்பனையில் வழங்கப்படுகிறது; சில்லரை விற்பனையில் மாற்ற மின்றி மூன்று ரூபாய் வரை விற்கப் படுகிறது. தை பூசம் முடிந்ததும் விற் பனை நன்றாக இருக்கும்,' என்றார்.

**எண்ணெய் விலையில் மாற்ற மில்லை: சமையல் ஆயில் சங்கத் தலைவர் சந்திரன் கூறுகையில்**, ""கடந்த வார விலையில் மாற்ற மின்றி, ஆயில் விற்பனை நடக்கிறது. எண்ணெய் வரத்து தேவைக்கேற்ப உள்ளது. விற்பனை அதிகரித்தால் மட்டும் எண்ணெய் வரத்தை முழுமையாக கணிக்க முடியும். நல் லெண்ணெய் கிலோ 95; விளக் கெண்ணெய் 80; சூரியகாந்தி எண் ணெய் 61; கடலை எண்ணெய் 78; தேங்காய் எண்ணெய் 60; பாமாயில் கிலோ 46; நெய் கிலோ 280 ரூபாய்க் கும் விற்பனையாகிறது," என்றார்.

**தங்கம் விற்பனை அமோகம்: நகை வியாபாரிகள் சங்க துணை தலைவர் பரசுராமன் கூறியதாவது:**தை மாதத்தில் முகூர்த்த நாட்கள் அதிகம் இருப்பதால், தங்கம் விற் பனை சிறப்பாக உள்ளது. தாலிக் கொடி, மாங்கல்யம், ஒட்டியாணம் போன்றவைகளுக்கு அதிகளவில் ஆர்டர் செய்யப்படுகிறது. ஆவணி வரை தங்கம் விற்பனை நன்றாக இருக்கும்.

டாலர் மற்றும் யூரோ மதிப்பு குறையாமல் நிலையாக இருப்ப தால், ஆன்லைன் வர்த்தகத்தில் அதிகமான முதலீடு இல்லை. ஆன்லைன் வர்த்தகம் அதிகரிக்கும் பட்சத்தில் விலை அதிகரிக்கலாம். இன்று (நேற்று) ஒரு கிராம் 1,560 ரூபாய்; பவுன் 12,480 ரூபாய் என விற்கப்படுகிறது. வெள்ளி ஒரு கிராம் 29.50 ரூபாய்க்கு விற்கிறது, என்றார்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை: கடலோர மாவட்டங்களில் இன்று மழை பெய்ய வாய்ப்பு சென்னை வானிலை மையம் தகவல்

*சென்னை, ஜன.28–*
*வங்கக் கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை உருவாகி இருப்பதால் தமிழ்நாட்டில் கடலோர மாவட்டங்களில் ஒருசில இடங்களில் இன்று (வியாழக்கிழமை) மழை பெய்ய வாய்ப்பு உள்ளது என்று சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது.*
*வடகிழக்கு பருவமழை*

*தமிழ்நாட்டில் இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை காலத்தில் மாநிலம் முழுவதும் பரவலாக நல்ல மழை பெய்தது. நெல்லை, தூத்துக்குடி, கன்னியாகுமரி உள்ளிட்ட தென்மாவட்டங்களிலும் கடலோர மாவட்டங்களிலும் அவ்வப்போது கனமழையும் இருந்தது. வடகிழக்கு பருவமழை காரணமாக ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டில் நிலத்தடி நீர் மட்டம் கணிசமான அளவு உயர்ந்திருக்கிறது.*

*ஆறுகள், ஏரிகள், குளங்கள் உள்ளிட்ட நீர்நிலைகள் நிரம்பி காணப்படுகின்றன. வடகிழக்கு பருவமழை முடிவடைந்து தற்போது வெயில் அடித்து வந்தாலும் பனிப்பொழிவு குறைந்தபாடில்லை. சென்னை, காஞ்சீபுரம், திருவள்ளூர் உள்ளிட்ட மாவட்டங்களில் இரவு நேரம் தொடங்கி காலை 7 மணி வரை கடும்பனி காணப்படுகிறது. அதேநேரம் பகல் நேரங்களில் வெயில் வெளுத்து வாங்குகிறது.*

*இன்று லேசான மழை*

*இந்த நிலையில், சென்னையில் நேற்று காலை 9 மணி அளவில் திடீரென மேகமூட்டம் உருவாகி மழை பெய்தது. அடையாறு, சாந்தோம், திருவல்லிக்கேணி, அரும்பாக்கம், திரு.வி.க.நகர், பெரம்பூர், ஓட்டேரி, அயனாவரம், அண்ணாநகர் உள்பட பல்வேறு பகுதிகளில் சற்று கனமழை கொட்டியது. பகல் நேரத்திலும் ஆங்காங்கே விட்டுவிட்டு மழை பெய்தது.*

*இந்த நிலையில், தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அடுத்த 24 மணி நேரத்தில் கடலோர மாவட்டங்களில் மழை பெய்யும் என்று சென்னை வானிலை இலாகா தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக சென்னை மண்டல வானிலை ஆராய்ச்சி மைய இயக்குனர் குழந்தைவேலு கூறியதாவது:–*

*தமிழகத்தை ஒட்டியுள்ள வங்கக் கடலின் தென்மேற்கு பகுதியில் மெலிந்த காற்றழுத்த தாழ்வுநிலை உருவாகி இருக்கிறது. இதன் காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அடுத்த 24 மணி நேரத்தில் கடலோர மாவட்டங்களில் ஒருசில பகுதிகளில் லேசாக மழை பெய்யக்கூடும். கடந்த 24 மணி நேரத்தில் சென்னை உள்பட சில இடங்களில் மழை பெய்துள்ளது. காரைக்காலில் 1.2 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது.*

*இவ்வாறு குழந்தைவேலு கூறினார்.*

## மரபணு கத்தரிக்காயை பயிரிட ஒப்புதல் அளிக்க வேண்டும் மத்திய அரசுக்கு விஞ்ஞானிகள் கோரிக்கை

*புதுடெல்லி, ஜன.28–*
*மரபணு மாற்றம் செய்யப்பட்ட கத்தரிக்காயை பயிரிட ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு உயிரி தொழில்நுட்ப விஞ்ஞானிகள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.*

*மரபணு கத்தரிக்காய்*

*உயிரி தொழில்நுட்பம் அடிப்படையில் மரபணு மாற்றம் செய்யப்பட்ட புதிய உணவுப்பயிர்கள் சமீப காலமாக உலகின் பல்வேறு பகுதிகளில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன.*
*இதற்கு, இயற்கை உணவை ஆதரிப்பவர்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள். மரபணு மாற்றம் செய்யப்பட்ட உணவு வகைகள் சுகாதார குறைபாட்டை ஏற்படுத்தும் என்பதோடு விவசாயிகளையும் பாதிக்கும் என்று அவர் கூறுகிறார்கள். அந்த வகையில் மரபணு மாற்றம் செய்யப்பட்ட பி.டி.கத்தரிக்காயை இந்தியாவில் அறிமுகம் செய்வதற்கும் அவர்கள் பலத்த எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள்.*

*மத்திய அரசுக்கு கோரிக்கை*

*இந்த நிலையில், மரபணு மாற்றம் செய்யப்பட்ட கத்தரிக்காயை பயிரிட ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு உயிரி தொழில்நுட்ப விஞ்ஞானிகள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.*

*இதுதொடர்பாக, உயிரி தொழில்நுட்ப விழிப்புணர்வு மற்றும் கல்வி அறக்கட்டளை என்ற அமைப்பின் சார்பில் மத்திய சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் வனத்துறை மந்திரி ஜெய்ராம் ரமேசுக்கு ஒரு கடிதம் எழுதப்பட்டு உள்ளது.*
*அதில் கூறப்பட்டு இருப்பதாவது:–*

*ஒப்புதல் அளிக்கவேண்டும்*

*முறைப்படியான ஆய்வுகளின் அடிப்படையில் மரபணு மாற்றம் செய்யப்பட்ட கத்தரிக்காய் உள்ளிட்ட பயிர்கள் உருவாக்கப்பட்டு உள்ளன. மரபணு மாற்றம் செய்யப்பட்ட பி.டி. பருத்தியை பயிர் செய்வது வர்த்தக ரீதியில் லாபகரமானது என்பது இந்தியாவில் ஏற்கனவே 2002–ம் ஆண்டில் நிரூபிக்கப்பட்டு உள்ளது. அதனால் எந்த ஆபத்தும் ஏற்படவில்லை.*
*எனவே, இந்திய விவசாயிகள் மற்றும் நுகர்வோரின் நலனை கருத்தில் கொண்டு மரபணு மாற்றம் செய்யப்பட்ட பி.டி.கத்தரிக்காயை வர்த்தக ரீதியாக பயிரிட, காலதாமதம் இன்றி மத்திய அரசு ஒப்புதல் அளிக்க வேண்டும். இல்லையேல் அதை சிலர் ரகசியமாக பயிர் செய்யும் நிலை ஏற்படும்.*

*இது நாட்டின் நலனுக்கு நல்லது அல்ல.*

*இவ்வாறு அந்த கடிதத்தில் கூறப்பட்டு இருப்பதாக உயிரி தொழில்நுட்ப விழிப்புணர்வு மற்றும் கல்வி அறக்கட்டளையின் நிர்வாக செயலாளர் பேராசிரியர் சி.காமேஷ்வர ராவ் பெங்களூரில் நிருபர்களிடம் தெரிவித்தார்.*

## *சித்தூர் பகுதியில்*
## *அறுவடைக்கு தயார் நிலையில் இஞ்சி விவசாயம்*

*கொழிஞ்சாம்பாறை, ஜன.28–*
*சித்தூர் தாலுகாவில் அறுவடைக்கு தயாரான நிலையில் 300 ஹெக்டேர் நிலத்தில் இஞ்சி விவசாயம் உள்ளது.*

*இஞ்சி விவசாயம்*

*பாலக்காடு மாவட்டம் கொல்லன்கோடு, நெம்மாரை, சித்தூர் முதலமடை ஆகிய பகுதிகளில் 300 ஹெக்டேர் நிலத்தில் இஞ்சி விவசாயம் செய்யப்பட்டுள்ளது. இவை இன்னும் 10 நாட்களுக்குள் அறுவடை செய்யப்பட உள்ளது. இஞ்சி விவசாயம் பெரும் லாபத்தை தற்சமயம் கொடுத்து வருகிறது.*

*இருப்பினும் இந்தப்பகுதி விவசாயிகள் இஞ்சி விவசாயத்தில் அக்கறை காட்டுவது இல்லை. காரணம் பொருளாதாரம். ஒரு ஏக்கரில் இஞ்சி விவசாயம் செய்ய ரூ.75 ஆயிரம் கொள்முதல் தேவை. இந்த அளவு பணத்தை கொள்முதல் செய்ய இந்தபகுதி விவசாயிகள் முன்வருவதில்லை.*

*அதிக லாபம்*

*ஆனால் திருச்சூர், கோட்டயம், கொச்சி பகுதிகளில் உள்ள வசதி படைத்த விவசாயிகள் இந்தப்பகுதியில் உள்ள நிலங்களை குத்தகைக்கு எடுத்து இஞ்சி விவசாயம் செய்து வருகிறார்கள். இவர்கள் கொச்சி மார்க்கெட் நிலவரத்திற்கு ஏற்ப கொள்முதல் செய்து அதிக லாபம் அடைந்து*

*வருகிறார்கள்.*

*இது தவிர இஞ்சியை காயவைத்து சுக்காக்கி விற்பதாலும் இவர்கள் அதிக லாபம் அடைகிறார்கள். கடந்த மாதம் 20 ரூபாய்க்கு விற்ற இஞ்சி தற்போது ஒரு கிலோ(கொச்சி மார்க்கெட் விலை) 25 ரூபாயில் இருந்து 32 ரூபாய் வரை விற்பனையாகிறது.*
*ஒரு ஏக்கரில் 10 டன் வரை இஞ்சி விளையும். தவிர சுக்கு ஒரு கிலோ ரூ.105 முதல் ரூ.110 வரை விற்பனை செய்யப்படுகிறது. கொள்முதல் ரூ.75 ஆயிரம் போக விற்ற வரவில் சுமார் ரூ.2½ லட்சம் கிடைக்கும். இஞ்சி விவசாயத்தில் அனைத்துவிவசாயிகளும் ஈடுபட்டு வருமானத்தை பெருக்கிக்கொள்ளலாம்.*

### *சர்வதேச பொருளாதார நிலவரத்தால் பாதிப்பில்லை நாட்டின் பாசுமதி அரிசி ஏற்றுமதி 30 லட்சம் டன்னாக உயரும்*

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*

*நடப்பு ஆண்டில் நாட்டின் பாசுமதி அரிசி ஏற்றுமதி பன்மடங்கு அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாண்டில் 30 லட்சம் டன் பாசுமதி அரிசி ஏற்றுமதி ஆகும் என ஏற்றுமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.*

*சவூதி அரேபியா*

*சவூதி அரேபியா பாசுமதி அரிசிக்கு வழங்கி வந்த மானியத்தை விலக்கிக் கொண்டது. மேலும் ஈரான் மற்றும் துபாய் ஆகிய நாடுகளில் ஏற்பட்ட நிதி நெருக்கடியையும் விஞ்சி 2009–ஆம் ஆண்டு டிசம்பர் வரையிலுமாக 23 லட்சம் டன் பாசுமதி அரிசி ஏற்றுமதியாகி உள்ளது. இதே நிலை நீடித்தால் கூடிய விரைவில் நாட்டின் ஒட்டுமொத்த பாசுமதி அரிசி ஏற்றுமதி 30 லட்சம் டன்னை தாண்டிவிடும் என மதிப்பிடப்பட்டுள்ளது.*
*சென்ற ஆண்டை விட, நடப்பு ஆண்டில் பாசுமதி அரிசியின் விலை சர்வதேச சந்தையில் மிகவும் குறைந்துள்ளது. இந்த நிலையிலும் ஏற்றுமதி குறிப்பிடத்தக்க அளவிற்கு வளர்ச்சி கண்டு வருகிறது என அகில இந்திய அரிசி ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் விஜய் அரோரா தெரிவித்தார்.*

*உற்பத்தி*

*நடப்பு ஆண்டில் பாசுமதி அரிசி உற்பத்தி சென்ற ஆண்டை விட 15 லட்சம் டன் அதிகரித்து 45 லட்சம் டன்னாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.*
*கடந்த 2008–09–ஆம் ஆண்டு நாட்டின் பாசுமதி அரிசி ஏற்றுமதி 23.10 லட்சம் டன்னாக இருந்தது. இதில் பெரும்பகுதி உயர்தரம் வாய்ந்த பாசுமதி அல்லாத அரிசி வகையாகும். முந்தைய 2007–08–ஆம் ஆண்டில் பாசுமதி அரிசி ஏற்றுமதி 15.10 லட்சம் டன் அளவிற்கு இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.*

*மத்திய அரசு உள்நாட்டில் அரிசி விலையை நிலையாக வைத்திருக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைககளை மேற்கொண்டு வருகிறது. இதனையடுத்து இந்தியா, இவ்வாண்டு அதிக அளவில் அரிசி இறக்குமதி செய்யும் என்ற கருத்தால் சர்வதே சந்தைகளில் அரிசியின் விலை உயர்ந்துள்ளது. இந்த நிலையில் உள்நாட்டில் அரிசி உற்பத்தி மதிப்பீட்டை விட அதிகரிக்கும் என்ற நிலைப்பாடும் உள்ளது. மேலும் மத்திய அரசு கையிருப்பில் உள்ள அரிசியை சந்தைக்கு விரைந்து விற்பனைக்கு அனுப்ப முடிவு செய்துள்ளது. ஏனெனில் நடப்பு சம்பா பருவத்தில் கொள்முதல் செய்யப்படும் அரிசியை இருப்பில் வைக்க வேண்டுமானால், கையிருப்பில் உள்ள அரிசியை உள்நாட்டுச் சந்தையில் விற்பனை செய்ய வேண்டும்.*

*உள்நாட்டில் கோதுமை விலை அதிகமாக உள்ளதால் ஏற்றுமதி சுணக்கமாக உள்ளது. குறிப்பாக, இவ்வாண்டில் 6.50 லட்சம் டன் கோதுமை ஏற்றுமதி செய்ய அனுமதி அளிக்கப்பட்டு இருந்தது. ஆனால் இதுவரை 35,000 டன் கோதுமை மற்றும் கோதுமை பொருள்களே ஏற்றுமதி ஆகி உள்ளது. உள்நாட்டில் மொத்த விலை சந்தையில் ஒரு டன் கோதுமை விலை ரூ.2,000 என்ற அளவில் உள்ளது. இது, சர்வதேச சந்தை விலையை விட அதிகமாகும்.*

*இந்த நிலையில் மத்திய அரசு கோதுமை கையிருப்பை விரைந்து குறைக்கும் வகையில் கோதுமை ஏற்றுமதி மீது விதிக்கப்பட்டிருந்து தடையை சென்ற ஆண்டு ஜூன் மாதமே விலக்கிக் கொண்டது. சென்ற வாரம் மத்திய அரசு பொது விநியோகத்தின் கீழ் கூடுதலாக 10 கிலோ அரிசி மற்றும் கோதுமையை விற்பனை செய்ய அனுமதி அளித்தது. பணவீக்கம் அதிகரித்து வருவதை கருத்தில்கொண்டு, அரசு பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் 30 லட்சம் டன் கோதுமையை பொதுச் சந்தைக்கு விற்பனைக்கு அனுப்பும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

*பரப்பளவு*

*மத்திய அரசு சென்ற வாரம் வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில், ஜனவரி 21–ந் தேதி வரையிலுமாக நாட்டின் கோதுமை சாகுபடி செய்யும் பரப்பளவு 2.76 கோடி ஹெக்டராக உள்ளது என அறிவித்துள்ளது. இது, சென்ற ஆண்டில் 2.75 கோடி ஹெக்டராக இருந்தது.*
*நம்நாட்டில் அரிசி கொள்முதல் பருவம் அக்டோபர் 1–ந் தேதி முதல் கணக்கிடப்படுகிறது. இவ்வகையில் நடப்பு பருவத்தில் 2.80 கோடி டன் அரிசி கொள்முதல் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, கடந்த ஆண்டு கொள்முதல் செய்யப்பட்ட 2.60 கோடி டன்னை விட 20 லட்சம் அதிகமாகும்.*

*அதிக அளவில் அரிசி உற்பத்தியாகும் ஆந்திரா, ஒரிசா ஆகிய மாநிலங்களில் அரிசி கொள்முதல் இம்மாதம் இறுதியில் இருந்து முழு வீச்சில் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

# வேளாண்மை செய்திகள்

## களர்-உவர் நிலங்களை

# விளை நிலங்களாக மாற்ற பின்பற்ற வேண்டிய வழி முறைகள்

பெருகிவரும் மக்கள் தொகைக்கு தேவையான உணவு உற்பத்தி செய்ய, சாகுபடி செய்யப்பட்டும் நிலப்பரப்பில் வேளாண்மை தொழில் நுட்பங்கள் மூலம் சராசரி மகசூலை அதிகரித்தல், தரிசாக உள்ள நிலங்களில் புதிய சாகுபடி தொழில்நுட்பங்களை கடைப்பிடித்து நிலத்தை சீர்திருத்தம் செய்து சாகுபடிக்கு அதிக நிலப்பரப்பை கொண்டு வருதல் ஆகிய 2 வழிமுறைகள் உள்ளன. சமூக சீர்திருத்தத்தின் அடிப்படையில், சாகுபடி நிலப்பரப்புகள் குறைந்து கொண்டே வருகிறது.

நம்நாட்டில் தற்போது சுமார் 70லட்சம் ஹெக்டேர் களர்-உவர் நிலங்கள் சாகுபடி செய்யாமல் தரிசாக உள்ளது. இந்த நிலங்களை சீர்திருத்திக் கொண்டு வருவதன் மூலம் கூடுதலாக சுமார் 350 லட்சம் டன் உணவு உற்பத்தி செய்ய வாய்ப்பு உள்ளது. தமிழ்நாட்டில் 3 லட்சம் ஹெக்டேர் களர்-உவர் நிலங்கள் உள்ளன. இதில் 2 லட்சம் ஹெக்டேர் நிலம் களர் நிலமாகவும், 1 லட்சம் ஹெக்டேர் நிலம் உவர் நிலமாகவும் உள்ளன.

### உணவு உற்பத்தி

இந்த நிலங்களை சீர்திருத்தம் செய்து உற்பத்தி செய்தால் சுமார் 15 லட்சம் டன் உணவு உற்பத்தி செய்ய முடியும். தமிழ்நாட்டில் தரிசு நில மேம்பாட்டு திட்டத்தின் வாயிலாக நிலச்சீர்த்திருத்தம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மண் உண்டாவதற்கு காரணமாக அமைந்த தாய்ப்பாறைகள் களர்-உவர் உப்புகளாகிய சோடியம் கார்பனேட், சோடியம்பை கார்பனேட், சல்பேட், குளோரைடு உப்புகளை அதிக அளவில் பெற்றிருந்தாலும், வடிகால் வசதி சீராக அமையாமல் உப்புகள் மண்ணிலேயே தங்க நேரிடுவது, தொடர்ந்து உவர் பாசன நீரை பாசனத்துக்கு பயன்படுத்துவது, நிலத்தடி நீர் நுண்ணிய துவாரங்கள் மூலமாக நிலப்பரப்புக்கு மேலே வந்து படிகிறது. இதனால் உவர்-களர் நிலங்கள் உருவாகின்றன. களர் மண் மூலம் பல்வேறு தீமைகள் ஏற்படுகின்றன.

### களர்-உவர் நிலங்கள்

அதாவது, களர் நிலங்களில் மண் இறுகி காற்றோட்ட வசதி இல்லாமல் இருப்பதால் வேர் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. இதனால் உழவு செய்வதற்கு கடினம் ஏற்படுகிறது. உழவு செய்யும் போது தண்ணீர் வடியாமல் சேறு போன்று காணப்படும். இதனால் உழவு மாடு கலப்பையை இழுக்க மிகவும் சிரமப்படுகிறது. கோடை காலத்தில் நிலத்தில் வெடிப்புகள் அதிகமாக காணப்படுவதால், சத்துள்ள மேல் மண் அதிக ஆழத்துக்கு கொண்டு செல்லப்படுகிறது.



பயன்படுத்த முடியாத அளவுக்கு, வளம் இல்லாமல் காணப்படும் நிலத்தை படத்தில் காணலாம்.

இதனால் ஊட்டச்சத்துக்கள் பயிருக்கு கிடைக்காத நிலை ஏற்படுகிறது. நிலங்களுக்கு நன்மை செய்யும் நுண்ணுயிர்களின் பெருக்கமும், செயற்பாடும் பெரிதளவில் பாதிக்கப்படுகிறது. சோடியம் கார்பனேட் உப்புக்கள் வேரின் வளர்ச்சியை பாதிக்கிறது. சோடியம் அயனிகள் செடியினுள் அதிக அளவில் உள்சென்று நச்சுப் பொருளாக அமைகிறது. செடிகள் கருகிபோனது போல் திடுத்திட்டாக காணப்படும்.

### மேம்படுத்துவது எப்படி?

★ நிலத்தை 20-30 சென்ட் அளவுக்கு பாத்திகளாக பிரித்து 1 அடி உயரத்துக்கு வரப்பு கட்ட வேண்டும். நிலத்தில் 100-200 அடி இடைவெளியில் 1½ அடி அகலத்திற்கும், 2 ஆழத்திற்கும் வடிகால் வெட்ட வேண்டும்.

★இந்த பகுதிக்கு மேலுள்ள பகுதியில் இருந்து உப்புக்கள் வடியாமல் இருக்க குறு வடிகாலும் அமைக்க வேண்டும். மண் பரிசோதனைப்படி பரிந்துரை செய்யப்பட்ட அளவு ஜிப்சத்தை பாத்திகளில் சீராக பரப்பி நீர்பாய்ச்சி உழுதல் வேண்டும்.

★நீரை 4 அங்குலத்தில் இருந்து 6 அங்குலம் உயரத்துக்கு தேக்க வேண்டும். இந்த நீர் தானாக கசிந்து வடிகாலில் கலக்குமாறு அமைக்க வேண்டும். அதற்காக வாய்க்காலில் வெட்டி விடக் கூடாது.

★நீர் குறையக்குறைய 4-6 அங்குலம் உயரத்திற்கு 2 அல்லது 3 நாட்கள் வரை தொடர்ந்து நீரை தேக்க வேண்டும். வடிகாலில் கசிந்து வரும் நீர், சோடியம் கலந்த உப்புநீர் ஆகும். இந்த நீரை வெளியேற்ற வேண்டும்.

### விளைநிலமாக மாற்றலாம்

★வடிகால சீராக வைத்து ஒவ்வொரு ஆண்டும் தக்கைப்பூண்டு, கொளுஞ்சி போன்ற பசுந்தாள் உரங்களை பயிரிட்டு உழுது நீரை தேக்கி வடிய வைத்தால் மிதமான களர் நிலத்தை விளைநிலமாக மாற்ற முடியும்.

★கரும்பாலை கழிவான பிரஸ்மட், தென்னை நார்க்கழிவு, பனை ஓலை, புங்கம் தழை ஆகிய வற்றை நிலங்களில் போட்டு வைக்கலாம். பயிடும்போது நெல்லுக்கு துத்தநாக சல்பேட்டும், இதர பயிர்களுக்கு மணிச்சத்து உரமாக சூப்பர் பாஸ்பேட்டும் போட வேண்டும்.

★மானாவரி புன்செய் நிலத்தில் களரை நீக்க, மண்மாதிரி எடுத்து ஆய்வு மேற்கொள்ள வேண்டும். அதைத்தொடர்ந்து நிலத்தை ஆழமாக உழ வேண்டும். குறுகிய இடைவெளியில் 50 முதல் 100 வடிகால்களை அமைக்க வேண்டும். பெய்கிற மழை நீரை தேக்கி, மண்ணில் ஊடுருவ செய்து, இயற்கை ருவாகிய தொழு உரம், கம்போஸ்ட் போன்றவற்றை அதிகம் பயன்படுத்த வேண்டும். இவ்வாறு செய்தால் களர்-நிலங்களை விளைச்சல் நிலமாக மாற்றி நாட்டின் உற்பத்தி விழுக்காட்டை அதிகரிக்க முடியும்.

-தகவல்: தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம், கோவை.

# உளுந்தில் மகசூல் அதிகரிக்க உதவும் கடல்பாசி திரவம்

இன்றைய வேளாண்மையில் மகசூல் அதிகரிக்க அதிக அளவில் ரசாயன உரங்களை விவசாயிகள் பயன்படுத்துகின்றனர். இதன் காரணமாக மண்ணின் வளம் பாதிக்கப்படுவதோடு அதன் சுற்றுப்புறச் சூழ்நிலை மற்றும் மனிதனின் நலனும் பாதிக்கப்படுகிறது. ஆகையால் இயற்கையில்கிடைக்கும் உரங்களை பயன்படுத்தி நமது வேளாண்மை பயிர்களை ரசாயன உரம் இல்லாத அளவில் விளைவிக்க வேண்டும். அந்த வகையில் கடல் பாசியானது இயற்கையில் கிடைக்கக்கூடிய ஒரு உரமாகும். இந்த கடல் பாசியில் வளர்ச்சியை தூண்டக்கூடிய பொருட்களான வளர்ச்சி பூச்சிகள், ஆக்சின், ஜிப்ரெலின், வைட்டமின்கள், அமினோ அமிலங்கள் மற்றும் நுண்ணூட்டச் சத்துகள் அடங்கி உள்ளன. இதை கருத்தில் கொண்டு உளுந்தில் கடல் பாசிகளின் உரதிரவத்தை பயன்படுத்தி ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த கடல் பாசிகளில் உல்வா லாக்டுக்கா, டர்பினோரியா கோனாய்ட்ஸ், சர்காசம் பாலிசிஸ்டம் போன்றவை உள்ளன. இவைகளை மத்திய கடல்பாசி நிறுவனம் மற்றும் மீன்வள ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் ராமேஸ்வரம் பகுதியில் உள்ள



மண்டபம் கடற்கரை பகுதியில் சேகரிக்கப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

இந்த கடல்பாசிகளை நன்கு கழுவி உலர்த்தி பொடி செய்து கொதிக்க வைத்து ஆல்கஹாலில் கரைத்து கடல்பாசி உரதிரவம் தயாரிக்கப்பட்டது. இதில் இருந்து .75 சதவீதம் விதை நேர்த்தியாகவும், 2.50 சதவீதம் இலைவழி நுண்ணூட்டமாகவும், இளம்பருவம் மற்றும் பூக்கும் பருவத்தில் தெளிக்கப்பட்டது. சில நாட்களுக்கு பிறகு செடியின் உயரம், இளம் பருவம், காய்ந்த செடியின் எடை, இலையின் பச்சையம், இலையின் அளவு, வளர்ச்சி அளவு, காய்களின் அளவு, காய்களின் எண்ணிக்கை, விதைமகசூல் மற்றும் செடியின் வளர்ச்சி கணக்கிடப்பட்டது.

அப்போது எல்லா கடல்பாசிகளும் உளுந்தின் வளர்ச்சி மற்றும் மகசூலை அதிகரித்து இருந்தது தெரியவந்தது. கடல் பாசிகளுள் சாகாசம் பாலிசிஸ்டம் என்ற பிரவுன் வகையானது நீண்ட ஆய்வுக்கு உட்படுத்தப்படாத உளுந்து செடியைவிட 19 சதவீதம் அதிக மகசூல் அதிகரித்து இருந்தது ஆய்வில் தெரியவந்தது.